தென்மொழி

அணுக்குண்டு வெடிக்கின்ற வன்முறையை விட்டொழிப்பீர் !

அடடாவோ இந்தியா அணுக்குண்டை
வெடித்ததனால் அதன் மதிப்பே
இடமகன்ற உலகெங்கும் எட்டாத
வானத்தும் நிறைந்த தென்று
திடமாக மார்தட்டும் வீணர்காள்
ஈங்கொன்று தெரியச் சொல்வீர்
மடமடென மேலுயர்ந்து விட்டாரோ
வறுமைக்கோட் டின்கீ ழோரே!

எழுத்தறியாப் பெருமாளர் நூற்றுவரில்
எழுபதின்மர் என்னு மாறே
அழுத்துகின்ற மடமையினில் ஆழ்ந்திருக்கும்
பெருநாட்டில் வீஇண் பெருமைக்
கொழுப்பேறித் திரிகின்றீர் அணுக்குண்டு
வெடித்ததனால் கொக்க ரிப்பீர்
இழுக்குற்ற நுங்கோன்மை ஏற்றமுறல்
ஒருசிறிதும் இல்லை கண்டீர்!

வன்முறைக்குச் சிறிதளவும் இடங்கொடோம்
என்றுவாய் வீசி னாலும்
புன்மையுறு மதவுணர்ச்சி பொங்குற்று
மக்களுக்குத் தீங்கி ழைப்பீர்
அன்முறையே யல்லாமல் வேறென்ன
அணுக்குண்டு வெடிப்ப தெல்லாம்
இன்முறையை நாடுவிரேல் வன்முறையை
நீர்முதற்கண் விட்டொழிப்பீர்!

— இறை

உள்ளே...

தமிழ்வளர்ச்சிப் பணிகளும் கசப்பான சில உண்மைகளும் !

அறுபருவத் திருக்கூத்து (முதுவேனில்)

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

திருக்குறள் மெய்ப்பொருளுரை — ஓர் அறிமுகம்

செய்திகள்

நூல் அறிமுகம்

சுவடி - 30
ஓலை - 7
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 கடகம் (தூலை - 1998)

உவர்நிலத்து உப்பல்லால், நெல் ஒருபோதும் விளைவு ஆகாதே!

பாதிப்பேர் தமிழி னத்தில்
பகைமைக்குத் துணைபோ வோர்கள்!
சாதிப்போர் கட்சிப் போரின்
சழக்கினில் கால்வா சிப்போர்!
மீதிப்பே ரில்,பா திப்பேர்
மெலுக்கென வாழ்ந்து சாவோர்!
வீதிப்போ ராட்டத் திற்கோர்
விழுக்காடு வருவது) ஐயம்!

தமிழினத் தொண்டர் என்போர்
தமிழாலே பிழைப்பைச் செய்வோர்!
தமிழினத் தலைவர் என்போர்
தமிழின வணிகஞ் செய்வோர்!
இமிழாமல் உழைப்பைத் தந்தே
எந்தமிழ், இனம்,நாட் டிற்கே
அமிழாத உணர்வால் தம்மை
அளிப்பவர் எத்த னைப்பேர்?

இவர்தொகை, மிகமி கத்தான்
எந்தமிழ், இனம், நா டுய்யும்!
அவரவர் நலத்திற் காக
அயலவர்க் கடிமை செய்தே
எவரெவர் வாழ்கின் றாரோ—
இவர்தொகை குறைய வேண்டும்!
உவர்நிலத்(து) உப்பல் லால்,நெல்
ஒருபோதும் விளைவா காதே!

— **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

(சுவடி : 22, ஓலை : 5, 1986)

அழிநிலை மீட்கும் பாவலரேறு தமிழ்க்களம்
மொழி இன நாட்டினைக் காக்கும் செயற்களம்.

'பாவலரேறு தமிழ்க்களம்' — அமைக்க
உங்கள் பங்களிப்பைச் செய்துவிட்டீர்களா?

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் திபி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி
மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி. 30) திபி. உ0உகூ - கடகம் (சூலை-'98) (ஓலை. 7

தமிழ்வளர்ச்சிப் பணிகளும் கசப்பான சில உண்மைகளும்!

தமிழ்வளர்ச்சி – தமிழுக்கு ஆக்கஞ் செய்வது என்னும் வகையில் தமிழ்நாட்டரசு அடுத்தடுத்துச் சில திட்டங்களை அறிவித்துஞ் செயற்படுத்தியும் வருகின்றது. இப்போது நடுவணரசுச் சார்பிலுள்ள இலக்கியக் கழகம் (சாகித்திய அகாதெமி) போல் தமிழ் நாட்டரசின் சார்பில் 'கழக(சங்க)ப் பலகை' ஒன்று நிறுவுவது, தமிழுக்குப் புதிய இலக்கணநூல் ஒன்று உருவாக்குவது, 'தொல்காப்பியர் விருது' ஒன்றைத் தொடர்ந்து வழங்குவது, இந்திய விடுதலைப் பொன்விழாவை யொட்டித் திரு. இராசாசி முதலான பதினைவர் நூல்களை நாட்டுடைமை யாக்குவது முதலானவை குறிப்பிடத்தக்கவை.

கடந்த பல்லாண்டுகளாகத் தமிழ்நல – பொதுநல அமைப்புகள் பல, தமிழ்நாட்டின் ஆட்சிமொழி, கல்விமொழி–பயிற்றுமொழித் தொடர்பாகப் பல்வேறு கோரிக்கைகளை அரசின்முன் வைத்துள்ளன; அறப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றன. பாவலரேறு ஐயா அவர்களும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், முனைவர் வ.சுப. மாணிக்கம் முதலானோரும் தம் வாணாளின் இறுதிக் காலத்திலும் களத்தில் இறங்கிப் போராடினர். முனைவர்கள் சாலையார் – சாலினியார் ஆகியோரும், முனைவர் தமிழண்ணல் முதலானோருந் தொடர்ந்து போராடிவருகின்றனர். பல்வேறு

இயக்கத்தவர்களும் தங்களை இதுதொடர்பான போராட்டங்களில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றனர்.

இருந்தும், இவற்றைப் பற்றியெல்லாம் முறையாக உசாவியோ தக்கவர்களை அழைத்துப் பேசியோ ஆக்கவழிச் செயற்பாடுகளில் அக்கறை கொள்ளாத முதலமைச்சர் கலைஞர், தமிழுணர்வாளர்களைத் திசைதிருப்பும் போக்கில் பலகையென்றும் விருதென்றும் இலக்கணம் என்றும் நாட்டுடைமை என்றும் ஏதேதோ செய்து வருகிறார்.

இன்று சென்னைப் பல்கலைக் கழகம் முதல் சேலம்–பெரியார் பல்கலைக் கழகம் ஈறாகப் பல்வேறு வகைப்பாடுகளைக் கொண்டனவாகப் பதினெட்டுப் பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவற்றுள் தமிழ்ப் பல்கலைக் கழகமும் அடக்கம். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியனவும் உள்ளன. இவற்றிலெல்லாந் தமிழின் நிலை என்ன; எத்தகைய தமிழ்ப்பணி நடக்கிறது; ஆராய்ச்சிகளின் விளைவாகக் கொள்ளப்பட்ட முடிபுகள் என்ன; எந்த அளவுக்குத் தமிழ் வளர்ந்திருக்கிறது என்று நாட்டுமக்களுக்குத் தெரியவில்லை என்பதன்று; தொடர்புடைய அமைச்சர்களுக்கேகூடத் தெரியவில்லை!

இவ்வாறிருக்க, அரசு புதிதாக இலக்கியக் கழகம்(கழகப் பலகை) நிறுவுவதும் இலக்கண நூல் உருவாக்கத் திட்டமிடுவதும் விருதுகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதுந் தமிழ்த் தொடர்பாகத் தொடர்ந்து வரும் போராட்டங்களுக்கு அடிப்படையான சிக்கல்களைத் தீர்க்க எந்த வகையில் பயன்படும்?

இனி, நூல்கள் நாட்டுடைமை என்பது நூலாசிரியர்கள் மறைந்தாலும் அவர்கள்தம் பிறங்கடைகட்கேனும் காலங்கடந்தாவது வழங்கும் பரிவுத்தொகை வழியான நன்றிக்கடன் என்ற அளவினதேயன்றி, அந்நூல்கள் – கருத்துகள் மக்களிடையே எளிதில் பரவுதற்கு அதனால் ஏதும் வழியில்லை. இது கண்கூடு!

இது தொடர்பாக மேலுந் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்று உண்டு: நூலாசிரியர் ஒருவர் இறந்தால், அதன்பின் ஐம்பதாண்டுகட்கு மட்டுமே அவ்வாசிரியரின் பிறங்கடைகளுக்கோ நூலின் பதிப்புரிமை பெற்றவர்களுக்கோ அந் நூல்தொடர்பான உரிமையுண்டு. ஆசிரியரின் மறைவுக்குப்பின் ஐம்தாண்டுகள் முடிந்த அளவில் அவர்தம் நூல்கள் தாமாகவே நாட்டுடைமையாகிவிடும். அந்நூல்கள் தொடர்பாக யாரும் எவ்வகை உரிமையுங் கோரமுடியாது.

மறைமலையடிகளார் புகழுடலெய்தி (1950) நாற்பத்தெட்டு யாண்டுகள் கழிந்த பின்னரே – இன்னும் ஈராண்டுகள் மட்டுமே

உரிமையுடைய நிலையிலேயே அவர்தம் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அடிகளார்தம் பெருந்தகுதி நோக்கி அதுவும் பாராட்டுக்குரியதாகவே அமைந்தது. அடுத்து, இன்னும் ஐந்து-ஆறு ஆண்டுகள் மட்டுமே உரிமையுடைய நிலையிலேயே அண்ணல் திரு.வி.க. நூல்களும், பேரா. கல்கி நூல்களும் நாட்டுடைமை யாக்கப் பட்டுள்ளன. தொடர்ந்து, இந்திய விடுதலைப் பொன்விழாவை யொட்டி நாட்டுடைமை யாக்குவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள நூல்களுள் பல, முன்னரே உரிமைக்காலம் முடிவுபெற்று, இயல்பாகவே நாட்டுடைமை ஆகிவிட்டவை. எடுத்துக்காட்டாக விடுதலை வீரர் வ.உ. சிதம்பரனார் நூல்களைக் கூறலாம். வ.உ.சி. 1936-இல் மறைவுற்றார். அவருடைய நூல்களுக்கான உரிமைக்காலம் 1986-இலேயே முடிந்துவிட்டது. அதன்பின் பன்னீராண்டு கழித்து இப்போது அவற்றை நாட்டுடைமை யாக்குவதாக அறிவிப்பது பற்றி என்னென்பது?

தமிழ்நாட்டில் தமிழை முழுமையான ஆட்சிமொழியாக்க வேண்டும்; பலதுறைக் கல்விக்கும் அனைத்து நிலையிலும் பயிற்று மொழியாக்க வேண்டும்; ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளைத் தமிழ்வழிப் பள்ளிகளாக மாற்ற வேண்டும்; அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தாய்மொழி வழியேதான் கல்வி பயிற்றுதல் வேண்டும் – ஆறாம் வகுப்பு முதல்தான் ஆங்கிலமோ வேறு அயன்மொழியோ கற்பிக்கப்பட வேண்டும்; தமிழ் பயிலாமல் தமிழ்நாட்டில் எக்கல்வியும் பயிலும்நிலை இருத்தல் கூடாது; வேலை வாய்ப்புக்கான அரசுத் தேர்வுகள் தமிழிலேயே நடத்தப்படுதல் வேண்டும்; தமிழ்வழிப் பயின்றார்க்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை யளிக்கப்படுதல் வேண்டும் என்பனவும் இன்ன பிறவுமான தமிழ்நல – பொதுநல இயக்கங்களின் கோரிக்கைகளைச் சற்றுங் கண்டுகொள்ளாமல் புறக்கணித்துத் தமிழ்நாட்டரசு வேறு வகையான செயற்பாடுகளை மேற்கொள்வதன் பின்னணி சற்றுக் கசப்பானது.

தமிழ்நாட்டில் பேராயக்கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே தமிழ் ஆட்சிமொழி, பயிற்றுமொழித் தொடர்பான சட்டங்கள் இயற்றப் பட்டிருந்தாலும் அவற்றைச் செயற்படுத்துவதில் பேராயக் கட்சி ஆட்சியே அக்கறை கொள்ளவில்லை. முன்னை நயன்மைக்கட்சி – திராவிடர் கழகப் போக்குகளிலிருந்து வேறுபட்டுப் பேச்சிலும் எழுத்திலும் ஓரளவுத் தமிழுணர்வை எழுப்பியும் பரப்பியும் வளர்ந்த தி.மு. கழகம், இந்தியெதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகப் பெருவெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பேற்றபின், தமிழ்த்தொடர்பாக மேலோட்டமான சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்தனவேனும், ஒருசாண் ஏறி முழம்முழம் வழுக்கியது போல் தமிழ்வளர்ச்சிக்கு மாறாக ஆங்கிலக் கவர்ச்சி அதிகரித்துத் தமிழைப் படுகுழியில் தள்ளும் நிலை

ஏற்பட்டுவிட்டது. தி.மு.க. என்பது ஈண்டு அ.இ.அ.தி.மு.க.வையும் உள்ளடக்கியதே!

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன் — பாவலரேறு ஐயா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் நிகழ்த்திய உரை, கடந்த காலப் பிழைகள் சில அவரால் உணரப்பட்டுவிட்டன என்பது போன்ற எண்ணத்தைத் தோற்றுவித் தமையால், தி.மு.க. ஆட்சி அமைந்ததும் தமிழ்த் தொடர்பான எல்லாச் சிக்கலுந் தீர்ந்துவிடும்; அனைத்துத் துறையிலும் தமிழ் ஆளுமைபெற்று ஓங்கிவிடும் என்று தமிழுணர்வாளர்கள் எதிர்பார்த்த தற்கு ஏற்பத் தமிழுக்கென்று தனி அமைச்சகங் கண்டதும்

"தொண்டு செய்வாய் தமிழினுக்குத்
துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே"

என்பது உள்ளிட்ட பாவேந்தர் பாடல்களை மேடைதோறும் முழக் கியவரான முனைவர் தமிழ்க்குடிமகன் அத் தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சரானதும் நம்பிக்கையூட்டுவனவாய் அமைந்தன. ஆயினும் என்? அனைத்தும் பொருளற்றன ஆகிவிட்டன!

உண்மையில் இன்றைய தமிழ்நாட்டரசு, தமிழைத் துறை தோறும் வளர்க்கவோ ஆட்சிமொழி பயிற்றுமொழிச் சட்டங்களை முழுமையாக நிறைவேற்றவோ விரும்பவில்லை. விரிவான வினைக் களம் நாடும் மேனாள் நடுவணரசு அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள், தமிழ்நாட்டை ஆங்கில மயமாக்குவதில் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறார். அயல்நாட்டுத் தொடர்புகளால் – குறிப்பாக அமெரிக்காவின் முதலீட்டால் தமிழ்நாட்டில் தொழில்வளம் பெருக்கவேண்டும் என்றால் ஆங்கிலந் தெரிந்தவர்கள் அதிகம்பேர் இருக்கவேண்டும். இங்கே ஆங்கிலத்தின் பயன்பாடு எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அமெரிக்கத் தொழில்வளம் இங்கே பெருகுவது எளிது. மேற்கு வங்கத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம் இருப்பதைக் காட்டித்தான் அங்கத்திய முதலமைச்சர் திரு. சோதிபாசு அமெரிக்க முதலீட்டை ஈர்க்கிறார் என்றும் ஆங்கிலம் இல்லாவிட்டால் சென்ற நூற்றாண்டுக்குப் போக நேரும்; காட்டு விலங்காண்டிகள் ஆகிவிடுவோம் என்றுங் கூறி, முரசொலிமாறன், தமிழ்க்குடிமகனின் தமிழ்த்தொடர்பான முயற்சிகளைப் பொது மேடையில் வைத்தே கண்டித்தார். அவ்வாறு அவர் கண்டித்தது தமிழ்நாட்டரசின் மொழிக்கொள்கையையுந்தான்!

தமிழ் ஆட்சிமொழி, பயிற்றுமொழித் தொடர்பான முயற்சிக ளெல்லாம் ஓரங்கட்டப்பட்டு முனைவர் தமிழ்க்குடிமகனும் இந்து அறநிலையத் துறைக்கு உந்திவிடப்பட்டிருக்கிறார், அங்கே போய்ச்

செந்தமிழ் வளர்க்கட்டும் என்று. இந்திய அரசின் ஆட்சிக் கட்டிலிலிருக்கும் இந்து மதப் பா.ச.க.வுக்குப் பிடிக்காது ஆகையால், அதைப் பகைத்துக் கொள்ளும் வகையில் திருக்கோயில்களிலும் இனி அவர் தமிழ்பற்றிப் பேச முடியாது!

இனி, பொறியியற் கல்வியின் சில பாடப்பிரிவுகளைத் தமிழ் வழியில் நடத்த முயற்சி மேற்கொண்டு, பாடநூல்களும் பயிற்றாசிரியர்களும் அணியமாக இருந்தது மட்டுமல்லாமல், மாணாக்கர்களும் சேர்க்கைக்குப் படிவம் விடுத்திருந்த நிலையில், தமிழ்நாட்டரசு அதைத் தவிர்த்துவிட்டது.

பொறியியற் பாடங்களைத் தமிழில் நடத்த முன்வந்த கல்லூரிகள், தாமாகவே அனைந்திந்தியப் பொறியியற் கல்வி மேலாண்மைக் குழுவிடம் இசைவு பெற்றிருக்கலாமேனும் அவ்வெல்லாக் கல்லூரிக்குந் தானே இசைவு பெற்றுத் தருவதாகக் கூறி, அதற்கான படிவங்களை நிரப்பிப் பெற்றுக்கொண்ட தமிழ்நாட்டரசு, சிறிது காலங் கழித்து, அக்குழு இசைவுதர மறுத்து விட்டதாகக் கூறிவிட்டது. முதலமைச்சர் தாம் பேசிய கூட்டமொன்றில் இதனை யொரு செய்தியாகத் தெரிவித்து, "நீங்கள் தமிழில் நடத்தவேண்டும் என்றால் மற்ற மாநிலத்தவர்களுந் தத்தம் மொழியில் நடத்த வேண்டும் என்பார்களே?" என்று அக்குழு வினவுவதாகக் கூறி, "அவ்வாறு கேட்டால் தீவினையா(பாவமா)?" என்று அவரே ஒரு வினாவையுங் கூட்டத்தை நோக்கி எழுப்பிவிட்டுத் தமிழ்வழிக் கல்விக்குச் சேர்க்கைப் படிவம் விடுத்த மாணவர்களெல்லாம் ஆங்கிலவழி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களென்றும் அடுத்த ஆண்டில் (இவ்வாண்டு) தமிழ்வழிக் கல்விக்கு ஆவன செய்யப் படும் என்றுங் கூறினார்.

இந்தக் கல்வியாண்டு தொடங்கியது. பொறியியற் கல்லூரி நுழைவுத் தேர்வு, மாணவர் சேர்க்கை யெல்லாம் நடைபெற்று வகுப்புகளுந் தொடங்கிவிட்டன. சென்ற ஆண்டு முதலமைச்சர் கூறியபடி தமிழ்வழிக் கல்விக்கு எவ்வகை முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. இரு மாதங்கட்கு முன் மதுரைப் பல்கலைக் கழக விழாவொன்றில் உரையாற்றிய கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகனார் 'அதற்கான சூழல் இப்போது இல்லை; எப்போது அமையும் என்றுந் தெரியாது' என்கிறார்.

இவற்றைக் கூர்ந்து நோக்கும் போது சென்ற ஆண்டு கூறப் பட்டதிலேயே அவநம்பிக்கை கொள்ளத் தோன்றுகின்றது. அனைத் திந்தியக் கல்வி மேலாண்மைக் குழு ஒன்றைச் சொன்னால் – அதற்கு மறுபேச்சே இல்லையா? அப்படியே அடங்கிப் போய்விட வேண்டியது தானா? கடந்த சில மாதங்கட்கு முன், 'நடுவணரசின்

மின் சீரமைப்புத் திட்டங்களை ஏற்றுச் செயற்பட மறுத்தால்— உழவர்கட்கு இலவய மின்சாரம் அளித்தால் மாநில அரசுமீது நடவடிக்கை எடுப்போம்' என்று நடுவணரசு அமைச்சர் அரங்கராசன் குமாரமங்கலம் கூறியவுடன், இங்குள்ள அமைச்சர் ஆர்க்காட்டு வீராச்சாமி எகிறிப் பாய்ந்தாரே; முதலமைச்சரேகூட சீறினாரே! இந்தப் பாய்ச்சலுஞ் சீறலும் ஏன் தமிழ்வழிக் கல்வித் தொடர்பாக நிகழவில்லை?

ஆங்கிலவழிப் பள்ளிகள் கூட்டமைப்பின் விழாவுக்கு முதலமைச்சரும் அமைச்சர்கள் சிலரும் மாநகராட்சித் தலைவருஞ் சென்று கலந்துகொள்வது, 'தமிழ்நல இயக்கங்கள் சார்பில் எத்துணை எதிர்ப்புகள் இருந்தாலும் நாங்கள் பொருட்படுத்த மாட்டோம்; நீங்கள் தமிழ்வழிக் கல்வித் தொடர்பாக அஞ்சவேண்டாம்; தொடரட்டும் உங்கள் ஆங்கில வளர்ச்சிப் பணிகள்!' என்று கூறாமற் கூறுவதாகும். 'ஆங்கிலவழிப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப் படுவதில்லை என்ற குறையிருக்கிறது; அதற்கு இடந்தராதீர்கள்' என்று நோகாமல் நுவன்று வருகிறார்கள்.

'ஆங்கிலவழிப் பள்ளிகளைத் தமிழ்வழிப் பள்ளிகளாக மாற்ற வேண்டும்; ஆறாம் வகுப்புக்குமேல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கலாம்' என்று தமிழ்நல இயக்கங்கள் கோரினால், அதற்கு மாறாக 'ஆங்கிலவழிப் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம்' என்று, அப்படிக் கூறியதே ஒரு பெருஞ் செயல்வெற்றி போலக் கல்வியமைச்சர் பேராசிரியர் திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தமிழைப் புறக்கணித்துவிட்டு—தமிழுணர்வாளர்களைப் பகைத்துக்கொண்டு மக்கள் சாய்கால் பெற்றுவிட முடியாது என்பது பொதுவுடைமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கட்கு வேண்டுமானால் இன்னமும் தெரியாமல் இருக்கலாம். தி.மு.க.வினருக்கு அது தெளிவாகத் தெரியும். ஆகவேதான், தமிழுணர்வாளர்களைத் திசைதிருப்பும் போக்கில், தமிழை இந்திய – நடுவணரசின் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று தமது கட்சி மாநாட்டில் முரசொலி மாறன் தீர்மானம் நிறைவேற்றினார். பல்கட்சித் தேர்தல் அறிக்கைகளும் வெவ்வேறு வடிவில் அதையே தாங்கிவந்தன. தமிழைச் செம்மொழிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதில் தமிழ் மாநிலப் பேராயக் கட்சியினருக்குக்கூட அக்கறை ஏற்பட்டது!

தமிழை இந்திய ஆட்சிமொழி ஆக்கவேண்டும் என்றுஞ் செம்மொழிப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்றுங் கூறிய தி.மு.க.வும் த.நா. பேராயமும் உள்ளிட்ட தேசிய முன்னணி, நடுவணரசு ஆட்சிப் பொறுப்பில் ஒன்றரையாண்டுக் காலம் இருந்தும், இருநான்கு பேர்

அமைச்சர்களாக இருந்துங்கூடத் தமிழ் ஆட்சிமொழி, செம்மொழி என்றெல்லாம் யாரும் நாவைப் புரட்டிப் பேசியதுகூட இல்லை!

‘எங்குந் தமிழ்; எதிலுந் தமிழ்!’ என்பதும் ‘வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!’ என்பதும் முதலமைச்சர் முழங்கும் தொடைநயம் மிக்க தொடரியங்கள்! கடந்த இரு மாதங்கட்கு முன்புகூடப் ‘பேசிங்கு’ அகவியின் தமிழ்ச் செய்தி பரப்புதலைத் தொடங்கிவைத்த முதலமைச்சர், முதற்செய்தியாக ‘எங்குந் தமிழ்; எதிலுந் தமிழ்!’ என்றது நினைவுகூரத்தக்கது. இம் முழக்கமெல்லாம் கவர்ச்சி பற்றிய வெற்றாரவாரத்தன மட்டுமல்ல; மக்களை ஏமாற்றுந் திறத்தினவுமாகும்!

ஒன்றுமட்டும் உறுதி: முதல்வர் கலைஞர் இன்னொரு வள்ளுவர் கோட்டம் கட்டவேண்டும் என்றாலுங் கட்டுவார்; பின்னும் இரு உலகத்தமிழ் மாநாடுகள் நடத்தவேண்டும் என்றாலும் உவப்போடு முன்வருவார்; பல்காப்பியர் விருதும் மற்றும் பல விருதுகளும் வழங்கவேண்டும் என்றாலுந் தயங்கமாட்டார்; அமையவிருக்குங் கழகப் பலகையை மாவட்டந் தோறும் நீட்டவேண்டுமென்றாலும் நீட்டுவார்; தொழின்முறைத் தமிழாசிரியர்கள் பேராசிரியர்களுக் கெல்லாஞ் சம்பளத்தைக் கூட்டவேண்டும் என்றாலுங் கூட்டுவார்; இன்னும் பலர்பலர் நூல்களை நாட்டுடைமை யாக்கவேண்டும் என்றாலும் அவ்வாறே செய்வார்; உரைநடையில் ஒன்றும் உரை வீச்சில் ஒன்றுமாக இரு இலக்கண நூல்கள் உருவாக்க வேண்டும் என்றாலும் பொருளொதுக்கீடு செய்வார். ஆனால், தமிழை முழுமையான அளவில் ஆட்சிமொழி ஆக்கவோ, பயிற்றுமொழி ஆக்கவோ ஆவன செய்யமாட்டார்!

மொழி என்பது கல்வி – அறிவு வளர்ச்சியோடும் பட்டம் பதவி வேலைவாய்ப்புகளோடும் நாகரிகம் – பண்பாடு ஆகியவற்றோடும் மட்டும் தொடர்புடையதாக நிற்கவில்லை; இவற்றுக்கும் அப்பால் தொழிற் பெருக்கம், அயல்நாட்டு முதலீடு, வணிகச் சந்தை, ஒப்பந்தம், தரகுக்கூலி முதலானவற்றையுந் தொட்டுக் கொண்டுள்ளது!

இவற்றை யெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒன்றை நாம் தெளிவாக உணரலாம். முதலமைச்சர் கலைஞர் தமிழை ஓர் இலக்கிய மொழியாக மட்டுமே பார்க்கிறார்; அந்தப் பாங்கிலேயே அதனை வளர்க்க விரும்புகிறார். அந்நிலை கடந்து அதனைத் துறைதோறும் வளர்த்து நிறைவுறச் செய்யவோ அனைத்துத் துறைகளிலும் அதன்வழிப் பயன்கொள்ளும் நிலையை உருவாக்கவோ அவர் விரும்பவில்லை!

இத்துணையையும் நாம் முதல்வர் கலைஞர் அவர்களை நடுவாக வைத்தே கூறுவது அவரது பெருந்தகுதி நோக்கியேயன்றி வேறில்லை!

இனி, இலக்கியம் மொழியின் சிறந்த வெளிப்பாடு என்று கூறலாமேயன்றி அதுவே மொழியன்று. இலக்கியத்தையும் உள்ளடக்கி, வாழ்வியல் நிலைகள் அனைத்தையும் அளாவிநிற்பதே மொழி. தமிழ் நாட்டில் பழங்காலத்தில் தொழிற்பயிற்சியும் கலைப்பயிற்சியும் குடும்ப–குலவழிப்பட்டனவாகவும் நேர்முகக் களப்பயிற்சிகளாகவுமே இருந்தமை யாலும், தமிழே எல்லா நிலைகளிலும் புழக்கத்தில் இருந்தமையாலும் சிறப்புக்கருதி இலக்கியமே தமிழாகக் கொண்டு போற்றி வளர்க்கப் பட்டது. தொழில்களும் கலைகளும் தமிழில் பயிலப் பெறுவது இயல்பாகவும் இருந்தது. மக்களிடையே தேவையை யொட்டித் தமிழ் தானே வளர்வதாகவும் இருந்தது.

இன்றைய நிலை அத்தகையதன்று. தொழில்கள் கலைகள் எனப்படுவன அனைத்துமே நூல்வழிப்பட்டனவ்வாகவும், கல்விக் கூடஞ் சார்ந்தனவாகவும் களப்பயிற்சியுங்கூடக் கல்விக்கூடத் திட்டத்தின் கூறாகவும் அமைந்து பெருகி வளர்ந்தோங்கி வருகின்றன. ஆகவே, அவையெல்லாம் நாட்டு மக்களுக்கு இயல்புரிமையுடைய தாய் மொழியில் வளர்ந்தாற்றான் அவற்றால் மக்கள் எளிதில் முன்னேற முடியும். அல்லாக்கால், மக்களுக்கு அம்மொழி பயன்படாதது மட்டுமன்று; அம்மக்களும் முன்னேறி வாழ முடியாது.

தமிழ், இலக்கிய அளவிலேயே நிற்க, எவ்வகைக் கல்வி கலைகளும் பிறமொழி வாயிலாகவே பயிலும் நிலை ஏற்பட்டால், தமிழ் நாளடைவில் மக்கள் வழக்கற்று, நூல்வழக்கு மட்டுமே கொண்ட மொழிகளின் பட்டியலில் இடம்பெற்றுவிடும். அந்தத் திசையிலேயே நாம் விரைந்துகொண்டிருக்கிறோம்!

ஆகவே, தமிழ்மக்கள் எவ்வாற்றானும் முன்னேற வேண்டுமானால், உரிமை நல்வாழ்வு வாழ வேண்டுமானால் தமிழை முழு வீச்சில் ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்துவதோடு, தமிழ் வழியாகவே அனைத்துக் கல்வித்துறைகளையும் பயிலுதற்கு வழி வகுப்பதும் இன்றியமையாதது. “தமிழ் நாட்டில் அனைத்தும் தமிழ் வழியில் நடைபெற வேண்டுமானால் தமிழ்நாடு விடுதலை பெற்ற நாடாக – தன்னுரிமை நாடாக இருந்தால்தான் முடியும்!” என்று கல்வியமைச்சர் பேரா. அன்பழகனார் கூறுகிறார். அவர் அவ்வாறு கூறுவது தமிழை அனைத்து நிலைகளிலுஞ் செயற்படுத்த முடியாது – அதனைக் கைவிட்டுவிட வேண்டியதுதான் என்னும் தமது நிலையை வலியுறுத்துவதற்காகத்தான்.

இத்தகைய நிலைகளை எண்ணித்தான் நாம் தொடக்கத்திலிருந்தே தமிழ்நாட்டு விடுதலையை வலியுறுத்தி வருகிறோம். அவ் வழிப் போராட்டத்தாலேயே தமிழைக் காக்கவும் வளர்க்கவும் முடியும்!

— இறை

அறுபருவத் திருக்கூத்து

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

6. முதிர்வேனில்

காலம் : ஆடவை – கடகம் (ஆனி, ஆடி)

பாட்டுச் சுருக்கம்:

பனிக்காலம் பின்செல்லப் பகலவனின் வெயிலைக் கண்டு விரும்பியவர்கள், பூக்கள் நிறைந்த குளத்தின்கண் வாழும் மீனைப் போல நீரிலே முழுகி அவ் வெய்யவனின் வெப்பத்தைப் பழிக்கும்படி, கொல்லுகின்ற பாம்பைவிடக் கொடியதென அஞ்சத்தக்க ஆடவை மாதம் வந்துற்றது.

தீய குணஞ் செயல்களைக் கொண்டவன் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசு போல வெதுப்புகின்ற மேலைக் காற்றும் கானல்நீரும் பொருந்தியுள்ளன.

மக்களாற் படும் துயரம் நிறைந்த மான்கூட்டம், தாம் சென்று தங்குதற்கு ஏற்ற பொதும்பரைத் தேடி அலைகின்றன.

சிறிய வாயையும் நீலமணி போன்ற கண்களையும் செந்நிறக் கால்களையும் குறுகிய தலையையும் உடைய புறாக் கூட்டம் வெப்ப மிகுதியால் தம் அழகிய உடல் சோர்வுறுகின்றது. வெப்பந் தாங்கமாட்டாத மூங்கில்கள் பசுமையான தழையும் இளங்குருத்துங் கருகலுற்று வாடுகின்றன. பறக்குங் காக்கைகள் நிலைகுலைகின்றன.

எரிக்கின்ற ஞாயிறு, நீண்ட கிளைகளையும் பருத்த அடிமரத்தையுங் கொண்ட முதுமரக்காவை இரையாகக் கொள்ளுகின்றது. இலைகள் தீய்ந்து உதிர்கின்றன. நீர்நிலைகள் வற்றுகின்றன. அனல் காற்று வீசுதலால் ஆவினம் மெலிவுறுகின்றது. மணல் கொதிப்பு அதிகரிக்கின்றது. வழிப் பறி கள்வரால் துன்புறுத்தப்பட்ட மக்களைப் போலச் சூறைக் காற்றின் சுழற்சியில் பறவைக்கூட்டம் வாடுகின்றது.

காட்டுத் தீப் பற்றிக் கொள்ளுதலால் கொடிய விலங்குகள் ஓடி அலைகின்றன. பறவைக் குஞ்சுகள் தாமிருந்த கூட்டொடும் எரிந்து புகைகின்றன. நூல்களைக் கற்றுவல்லார் வறுமைவாய்ப்பட்டு வருந்தி இறப்பது போலப் புற்றுள்ளிருந்த பாம்புகள் அங்கேயே வெந்து மடிகின்றன.

குளம் வற்றியமையால், அதன்கண் வாழ்ந்திருந்த தவளை அங்கு மிங்கும் ஓடிப் புற்று ஒன்றின் பொந்தில் நுழைந்து சோர்வுறுகின்றது.

வலிமையான வாயையுடைய பன்றிகள் வறண்டுகிடக்கும் வயலைத் தோண்டி மணங்கமழும் நல்ல கோரைக் குத்தைப் பெயர்த்து, வெப்பம் பொருந்திய மண்ணில் சுடப்பட்டிருந்த கிழங்கைச் சுவைபட உண்டு தடித்த நாக்கு வறளப்பெற்றுக் குரலெழுப்பி மூச்சிரைக்கின்றன.

தாய்மடியைப் பற்றிக்கொள்ளுங் குட்டியும் பெண்குரங்கும் பின்வரப் பெரிய மலைப்பிளவைக் காட்டி ஆண்குரங்கு அங்கே செல்கின்றது.

எரிக்கின்ற கதிரவன் வெப்பத்தால் சோர்வுற்ற கிளிக்கூட்டம் பரந்த நிழலைத் தரும் ஆலமரத்தின் பொந்துக்குள் ஒடுங்குகின்றது. முகத்தின் கண் தும்பிக்கையை யுடைய யானைகள் கானல்நீரை நோக்கிச் செல்ல, அவற்றைக் கார்முகில் என்று கருதி மயில்கள் மகிழ்ச்சியொடு செல்கின்றன.

தண்ணீர் வற்றியதும் பெரிய கரையையுடையதுமான ஆற்றின்கண் வெப்பத்தால் பொடிந்த மணல், வழிச்செல்வார்தம் பூப்போன்ற பாதங்களை எரிக்கின்றது. மருதநில மக்களுக்கெல்லாம் மிகுந்த பயனை வழங்கிய வயல்கள் விளைச்சலின்றி வெப்பத்தால் வெடித்துக் கிடக்கின்றன.

பண்பில்லாதவன் ஒருவன் மிகுந்த நோய்வாய்ப்பட்டுத் தனித்துக் கிடப்பது போலக் கடுமையான குரலையுடைய அரிமா கண்ணயர்ந்து கிடக்கின்றது.

அன்புணர்வு இல்லாதவனிடம் வாய்த்திருக்கும் செல்வத்தைப் போல வலிய எட்டி மரங்கள் வளமைபெற்றுப் பொலிவுற விளங்குகின்றன.

கோடை வெப்பம் மிகுதலால் அஞ்சிய பெட்டைக் காடைகள் தம் ஆண்பறவைகளைக் கூவியழைத்து விருப்பத்துடன் அவற்றொடு அணைந்து கொள்கின்றன. எழுச்சி வாய்ந்த இறகையுங் கொக்கரிக்குங் குரலையுயம் வளைந்த மூக்கையுங் கொண்ட வலியான் பறவைகள் தம் துணைப்பறவைகளொடு வானவெளியில் திரிகின்றன. வேம்பின் பழக்

குலைக் காம்பைப் பற்றி ஆண்காக்கை உலுக்குதலால் உதிர்ந்த இனிய பழத்தைப் பெண்காக்கை விழுங்கி மகிழ்கின்றது.

நீர் பருகுதற்கு வேட்கை மிகுதலால் ஆயர்கள் நாவன் மரத்தின்மீது ஏறி அதன் இனிய பழத்தைச் சுவைத்து உண்கின்றனர். பாலை, இலுப்பை ஆகிய மரங்கள் நிரம்பக் காய்களைத் தாங்கி நிற்கின்றன.

மாலைக் காலத் தென்றற் காற்றின் இனிமையில் மயங்கிக் காம விருப்பம் மீதூரப் பெற்ற வர்னம்பாடிப் பறவைகள் எழுப்பும் உச்ச ஓசையைக் கேட்டு, வெப்பத்தால் துன்புற்றுக்கொண்டிருந்தவர்கள் மகிழ்கின்றனர்.

பசுமையை இரையாகக் கொள்ளும் பகலவனாகிய எருது வானத்தினின்றும் வேகமாக இறங்கிவந்தது போல மலைநிலத்து மூங்கிற் புதரில் தீ மூண்டு அதனை அழிக்கின்றது. அது கண்டு அங்கு வாழ்ந்த குன்றவாணர்கள் பதற்றமடைந்து அடிவாரத்தை வந்தடைகின்றனர். ஊர்ப் பகுதியில் வாழும் மக்கள் வெப்பத்துக்கு அஞ்சி வெளியில் வராமல் குடியிருப்புகளிலேயே இருக்கின்றனர். ஆரவாரம் ஏதுமின்றி எங்கும் அமைதி சூழ்ந்திருக்கின்றது.

செல்வ வளமுடைய ஆண்மக்கள் தம் இல்லத்து உயர்ந்த மாடங்களில் மணங்கமழும் பல்வகை வேர்களைத் தூவிய படுக்கையின் மீது மென்மையான துணியை விரித்து அதன்மீது அமர்ந்து குளர்ச்சி பொருந்திய இனிய சுவைவாய்ந்த மதுவைப் பருகி, அணிகலன்களைப் பூண்ட மகளிர் குழலும் யாழும் எழுப்பும் இசைக்குப் பொருந்த நடனத்தின் சிறப்பை ஆடிக்காட்டக் கண்டு மகிழ்ந்தவாறு வெப்பத்தை உணராதே இனிதிருக்கின்றனர்.

செல்வ மனையகத்து மகளிர் அழகு பொருந்திய தம் மார்பகத்தின் வெப்பந் தணியுமாறு பனிநீரில் சந்தனத்தைக் குழைத்துப் பூசிக் கொள்கின்றனர்; தம் சிறிய பாதங்கட்குச் செம்பஞ்சின் குழம்பூட்டிக் கொள்கின்றனர்; அம்பு போன்றனவும் மீன் போன்றனவுமாகிய தம் கண்களுக்கு மை தீட்டிக் கொள்கின்றனர்.

நடுத்தரக் குடும்பத்தவர்கள் நல்ல நீர்நிறைந்த குளத்தில் அமிழ்ந்தி யிருந்து வெய்யவனின் தாக்குதலுக்குத் தப்புகின்றனர். வாயிற் கதவையும் பலகணிக் கதவையும் முழுமையாகத் திறந்துவிட்டு, உடலை வெப்பஞ் செய்யும் உடைகளைக் கழற்றி வெயர்வையைப் போக்கிக் கொள்கின்றனர். குடைகல்லின் குழைவி போன்ற கொழுமையான வெள்ளரிப் பழத்தை யுண்டு உடல் வெப்பத்தைத் தணித்துக்கொண்டு உயர்ந்த நாவல் மரத்தின் பரவிய நிழலில் துயில்கொள்கின்றனர்.

கரிய முகில் திரிகின்ற வானத்தின்கண் வெப்பக் கொதிப்பினால் ஏற்பட்ட கொப்புளங்களைப் போல விண்மீன்கள் தோன்றுகின்றன. கரையிலே கிடந்த செம்மீன் குளத்தில் விழுந்தக்கால் அக்குளநீர் அதனை இன்புறுத்துவதுபோல, வெயில் கொளுத்தும் பகற்பொழுது தீர வந்துற்ற இரவு உயிரினங்களை இன்புறுத்துகின்றது.

மாலைக் காலத்தே தென்றல் காற்று மனமகிழ்வூட்டுகின்றது. வானத் தெழுந்த முழுமதி வழங்கும் நிலவொளி, பறவைகளையும் விலங்கு களையும் மனப்புலன் அறிவுடைய மக்களையும் உடலும் உள்ளமும் குளிர இன்புறுத்துகின்றது. தென்றல் தழுவ, நிலவொளி விளங்கும் வெளி யிடங்களிலும் இல்லங்களின் முற்பகுதியிலும் மக்கள் துயின்று முழு இரவையும் கழிக்கின்றனர்.

இனிய இளவேனிற் காலம் கழிந்த பின்பு, வேனில் முதிர்கின்ற காலம் முற்பட்டு வந்துற்றது. முகில் திரியும் வானத்தின்கண் இம் முதிர் வேனிற்காலம் முழுவதும் கதிரவனின் ஆளுமை நிலைபெற்றமையால் மக்கள் யாவரும் நீரின் பயனை அறிந்துகொண்டனர்; நிலத்தின் விளைவாகிய பயனைக் கருதினர்; உழுதொழிலை எண்ணினர்; இரவுப் பொழுதின் பயனை மனங்கொண்டனர்; ஏரிகளின் சிதைவைத் திருத்தி அவற்றைப் புதுமைப்படுத்தினர்; நீர்நிலைகளுக்கான பெரிய கரைகளைச் செப்பனிட்டனர்; கார்முகிலின் வருகையை விரும்பினர்; அதன் பயனாகிய மழையை எதிர்நோக்கினர்.

கதிரவன் ஆட்சிசெய்யும் அழகிய இவ்வுலகின்கண் நீரால் கிட்டும் பயன்கள் பெருகுமாறு வாழ்த்துவோம்!

பசுமை மேயும் பரிதிக் காளை.

வெயிலொளி கண்டு விரும்பி னார்பூங்
கயத்துறு கயலெனக் கடிபுனல் மூழ்கி

எல்லவன் தீக்கன லேச வந்ததே
கொல்லும் அரவின் கொடிய ஆடவையே!

ஏந்து தீயவ னேற்ற அரசெனச்
காந்து குடவளி கானல் மேவிட,

மாந்தர் படுந்துயர் மண்டு மானினம்
போந்து தங்கவோர் பூதர்க் கலைதரச்

சிறுவாய் மணிக்கண், செங்காற் குறுந்தலைப்
புறவினங் கனல்படப் புனைவுட விளைப்பக் 10

கொதிபொறாப் பாசிலை குறுமுளை கருகி
வெதிரி வாட, விரைகொடி குலைய,

விரிகிளை, தடங்கால் வீமரக் காவை
எரிகதிர் மேய, இலைபொடிந் திழிய,

நீர்நிலை வற்ற, நெருப்பின் வளிபட்
டாநிரை மெலிய அறல்கொதிப் பேற,

ஆறலை கள்வர் அலைத்த மாந்தராய்ச்
சூறைச் சுழலில் புள்ளினம் சுருளக்

காடு தீயுறக் கடுவிலங் கலைதரக்
கூடொடும் பறவைக் குஞ்சுகள் புகையக்

கற்றவர் வறுமையுள் காய்ந்தழி வுறலாய்ப்
புற்றொடு நாகம் புழுங்கி யிறப்ப,

வற்றிய கயத்து வாழ்நுணல் அலைந்தொரு
புற்றின் நுழைவிற் புகுந்துடல் சோர,

வறல்வயல் கீண்ட வலிவாய்க் கேழல்
நறவுறு கோரை நறுங்கிழங் கெடுத்துச்

சுடுமண் சுட்டதைச் சுவைபட உண்டு
கொடுநாக் குலர்ந்து குரலெடுத் துயிர்க்க,

மடியுறுங் குட்டியும் மந்தியும் பின்வர,
கடிவிடர் காட்டிக் கடுவன் ஒதுங்க,

எரிகதிர் கானற் கிளைத்த கிளிக்குழாம்
விரிநிழல் ஆல வியன்புழை யொடுங்கக்

கைமுகக் களிறு கானல் நோக்கிட
மைமுகி லெனமயில் மகிழ்ந்து நடப்பத்

தண்புனல் வற்றிய தடங்கரை யாறு
மண்பொடிப் புண்டு மலரடி கொளுத்தப்

பழனர்க் கெல்லாம் படுபயன் தந்த
கழனி விளைவற்றுக் கனல்பட வெடிப்பப்

படுநோ யுற்ற பண்பிலா ளன்போல்
கடுங்குர லரிமா கண்படக் கிடப்ப,

அன்பிலான் றன்பால் ஆர்ந்த பொருள்போல்
வன்பெருங் காஞ்சிரம் வளமையின் பொலிவுறக்

கோடைக் கனல்படக் கூவி யாணொடுங்
காடையம் பேடு காமுற் றணைப்பக்

கலியிற கார்ந்த கனைகுரற் கொடுவாய்
வலியான் துணையொடு வான்வளைந் துவப்பக்

காம்பு பற்றியாண் காக்கை உகுத்த
வேம்பின் நறுங்கனி விழுங்குபே டுவப்ப,

மேவுநீர் வேட்கை மிகைபட இவர்ந்து
நாவல் நறுங்கனி கோவலர் குதப்பப்

பாலையோ, டிருப்பை பல்காய் தூக்க,
மாலைத் தென்றலில் மயங்கி மயலுறு

வானம் பாடி வல்லிசை கேட்டுக்
கானல் பட்டுளங் கவல்வோர் மகிழப்

பசுமை மேயும் பரிதிக் காளை
விசும்பி னின்று விரைந்தது போல

மூங்கிற் பெரும்புதர் மூண்டுதீ மேயப்
பாங்குறு குறவர் பதறிக் கீழ்வர,

ஊர்ப்புற மாந்தர் உட்புறத் தொடுங்க
ஆர்ப்பிலா தெங்கும் அமைதி போர்ப்பச்

செல்வ ஆடவர் சேணுறு மாடத்துப்
பல்வகை விரைவேர் படுக்கை தூஉய்

மென்கலை விரித்ததன் மேலமர்ந்து பனித்த
இன்சுவை மதுவுண் டேந்திழைப் பெண்டிர்

குழலொடும், யாழொடுங் கூத்தியற் காட்டத்
தழலுண ராத தன்மையி லிருப்ப,

மாடகப் பெண்டிர் மாமை மார்பகச்
சூடறப் பனிநீர்ச் சாந்தங் குழைத்துச்

செம்பஞ் சின்குழை சிற்றடி பூசி
அம்பெனுங் கயல்விழிக் கணிமை தீட்டி,

வெட்டியின் குறுவேர் விசிறிக் காற்றொடு
கட்டிய மெல்லுடை கலைவுறக் கிடப்ப,

நடுநிலை மாந்தர் நன்னீர்க் கயத்துட்
படுநிலை யுற்றுப் பரிதிக் கொடுங்கக்

கதவொடுங் காலதர் கடையுறத் திறந்து
வெதுப்புடை போக்கி வெயர்வுடல் காட்டி,

ஆடுகற் குழவி அன்னத் திரண்ட
கோடுறழ் வெள்ளரிக் கொழுங்கனி யுண்டே,

உடற்சூ டொடுங்கி ஓங்கிய நாவல்
படர்நிழல் படுத்துப் படுகண் அயரக்

கானற் கொதிப்பாற் கருமுகில் மேயும்
வானப் பருக்களாய் விண்மீன் விளங்கக்

கரைபடு செங்கயல் கயத்து வீழ்ந்ததாய்
எரிபகல் மாய்ந்தின் னிரவு மகிழ்தர,

அந்தித் தென்றல் அகமகிழ் வூட்ட,
வந்த முழுநிலா வழங்கிய ஒளியால்,

புள்ளும் விலங்கும், புலனறி மாந்தரும்
உள்ளும் புறமும் குளிர்வுற் றுவப்பத்

தென்றல் அணைக்குந் திகழ்நிலா வெளியிலும்
முன்றிலும் துயின்று முதிரிரா கழிக்க,

இன்னிள வேனில் ஏகிய பின்றை
முன்னிவந் தன்றே முதிர்படு வேனில்;

முதிர்படு வேனில் முழுவதும் முகிலுறு
கதிரர சாட்சி கால்கொள, யாவரும்

நீர்ப்பயன் கண்டனர்; நிலப்பயன் நினைந்தனர்;
ஏர்ப்பயன் எண்ணினர்; இருட்பயன் உன்னினர்;

ஏரி புதுக்கினர்; இருங்கரை மடுத்தனர்.
மாரி விழைந்தனர்; மழைப்பயன் நோக்கினர்;

கனலர சாளும் கவினுறு நிலத்துப்
புனல்படு நற்பயன் பொங்க வாழ்த்துமே!

முற்றும்.

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்ச்சி தி.பி. 2029 விடை 30 காரி (13.6.98) பிற்பகல், செங்கழுநீர்ப்பட்டு(செங்கற்பட்டு)க் காஞ்சி விடுதி அரங்கில், 'தமிழம்' செ. பன்னீர்ச்செல்வம் அவர்கள் தலைமையிலும் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. 'தென்மொழி' குழந்தை ஈகவரசன் தமிழ்வாழ்த்து இசைத்தார். திரு. சித்திரச் செந்தாழைஆறிறைவன் வரவேற்புரை யாற்றினார்.

திரு. க. வள்ளுவன் (பாட்டாளி மக்கட் கட்சி), திரு வ. வேம்பையன் (மறைமலைநகர்ப் பகுத்தறிவாளர் கழகம்), திருவாளர்கள் இறையழகன், சாமிமணி (திருக்கழுக்குன்றம் மறைமலையடிகள் மன்றம்), பாவலர் பல்லவன் (தமிழ்ச் சான்றோர் பேரவை), திரு. முத்து (கல்பாக்கம் சித்த மருத்துவ மன்றம்), திரு. கலைமன்னன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்) ஆகியோர் உரையாற்றினர்.

பாவரங்கம்:

சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் அவர்கள் தலைமையில் பாவரங்கம் சிறப்புற நடைபெற்றது. பாவலர் தமிழவேள்(சண்முகம்) 'பாவலரேறு ஐயா அவர்களின் பெரும்பணியில் தூய தமிழ்' என்னுந் தலைப்பிலும், பாவலர் கடவூர் மணிமாறன் '... மெய்யியல்' என்னுந் தலைப்பிலும், பாவலர் எழில்வாணன் '.... இளைய தலைமுறை' என்னுந் தலைப்பிலும், பாவலர் வடிவேலன் '... சிறுவர் இலக்கியம்' என்னுந் தலைப்பிலும் பாக்கள் படைத்தனர்.

மலர் வெளியீடு:

'தென்மொழி' பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு மலரை மருத்துவர் தொமினிக்கு சுவாமிநாதன் அவர்கள் வெளியிட்டார். புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் மலரைப் பெற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து திருக்கழுக்குன்றம் திரு. இறையழகன், மேனாள் அமைச்சர் ஆனூர் செகதீசன், திரு. விவேகானந்தன் முதலானோர் மலர் பெற்றுக்கொண்டனர். மருத்துவர் தொமினிக்கு சுவாமிநாதன் வெளியீட்டுரையும், புலவர் கி.த. பச்சையப்பன் ஏற்புரையும் நிகழ்த்தினார்.

கருத்தரங்கம்:

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் அரசேந்திரன் 'தென்மொழியின் தொண்டில் மொழியியல்' என்னும் பொருள் பற்றியும், திரு. மா. பூங்குன்றன் '.... கலைச்சொல்லாக்கம்' என்னும் பொருள்பற்றியும் உரையாற்றினர். '...இன எழுச்சியும் நாட்டுரிமையும்' என்னும் பொருள் குறித்து 'எழுகதிர்' முனைவர் அரு. கோபாலன் உரையாற்றினார். இறுதியில் பெரியார் திராவிடர் கழகத் தலைவரும் மேனாள் அமைச்சருமான திரு. ஆனூர் செகதீசன் அவர்கள் உரை நிகழ்த்தினார். திரு. பூங்கயல் நன்றி நவின்றார்.

நிகழ்ச்சியில் திரு. வ. வேம்பையன் அவர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளைக்கு உருவா ஐந்நூறும் தென்மொழிக்கு உருவா நூறும் நன்கொடையாகத் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களிடம் வழங்கினார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை ஒருங்கிணைத்த இந்நிகழ்ச்சித் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் திருக்கழுக் குன்றம் மறைமலையடிகள் மன்றத்தினர் தாமே பொறுப்பேற்றுச் சிறப்புறச் செய்திருந்தது நன்றிபாராட்டற் குரியது.

புலவர் தமிழரங்கன், திரு. மு. தமிழ்நெஞ்சன், திரு. இரா. தமிழ்க்கதிர், திரு. க. கண்ணன், புலவர் சோ.க. அறிவுடைநம்பி, திரு. மா. செ. தமிழ்மணி, புலவர் குமர. தன்னொளியன், திரு. விழுப்பரையன், திரு. புதுவைச் செழியன் முதலானோரும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தி னரும் உள்ளிட்ட வெளியூர், உள்ளூர்த் தமிழன்பர்கள் முந்நூறு பேருக்கு மேல் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர். ○

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

செங்கழுநீர்ப்பட்டு 13.6.98

(உரைச்சுருக்கம்)

சித்திரச் செந்தாழை (வரவேற்புரை)

ஐயா அவர்களின் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள நாம் அனைவரும் வந்திருக்கிறோம். பகிர்ந்துகொள்வதோடு ஐயா அவர்களின் கருத்துகளை ஏந்திச் செயல்படுவோம் என்று அனைவரையும் வரவேற்கிறேன்.

'தமிழம்' பன்னீர்ச்செல்வம் (தலைமையுரை)

தென்மொழி இதழைத் தொடங்கி, இயக்கமாக அதை வளர்த்து நடைமுறைப் படுத்தியிராவிட்டால் இந்தக் காலத்தில் தமிழ் முன்பிருந்ததைவிடத் தாழ்ந்திருக்கும். அப்போதிருந்த தமிழின் நிலையைவிட, இப்போது இருக்கும் தமிழின் நிலையில் தூய தமிழ்ச் சொற்கள் திரைப்படத்துறையிலும், அறிவியல் துறையிலும் எங்கும் பரவியிருப்பதைக் காணமுடிகிறது. இது ஐயா அவர்களின் தனித்தமிழ் மொழியின் தாக்கம்தான்! பெரியார் அவர்கள் எங்ஙனம் தம் குமுகாயக் கருத்துகளை மக்களிடம் விதைத்துவிட்டுச் சென்றாரோ அதுபோன்று, ஐயா அவர்கள் தனித்தமிழையும், குமுகாயக் கருத்துகளையும் மக்களிடையே ஊன்றிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

கலைமன்னன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்)

ஈழச் சிக்கலுக்காகவும், பொதுவுடைமை அமைப்புகளின் செயல்களோடும் தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டவர் பெருஞ் சித்திரனார் அவர்கள். எப்படிக் கடவுள் மறுப்பு என்றால் பெரியார் என்கிற கருத்து இருக்கிறதோ, அப்படித் தமிழ்–தமிழக மக்களின் உரிமை உணர்வு என்றாலே ஐயா பெருஞ்சித்திரனார் என்பதாகப் பதிந்திருக்கிறது.

முத்து (சித்த மருத்துவ மன்றம்)

மொழி, இனம், நாடு என்கிற முப்படிகளில் இத்தமிழகத்தை உயர்த்திடல் வேண்டும் என்று அனைத்து இயக்கங்களையும்

ஒருங்கிணைத்துக் கடுமையாகச் செயலாற்றினார்கள் ஐயா அவர்கள். பெரியாரோ, பெருஞ்சித்திரனாரோ தனி மாந்தர்கள் அல்லர். அவர்கள் கொள்கைக் குறியீட்டாளர்கள். எனவே அவர்களின் கருத்துகளை இன்றைய சூழலுக்கேற்பச் செயலாக்கிக் கொண்டு செல்வது என்பதே நாம் எண்ண வேண்டுவது. அச் செயலுக்காக நாம் அனைவரும் உண்மையிலேயே ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

பாவலர் பல்லவன் (தமிழ்ச்சான்றோர் பேரவை – திருக்கழுக்குன்றம்)

ஐயா அவர்களின் நாற்பதாண்டுகாலப் பணி பகுத்தறிவுப் பணியாக, குறள்நெறியைப் பரப்புகின்ற பணியாக, தமிழறிவை ஊட்டுகின்ற பணியாக, இன எழுச்சியை ஊட்டுகின்ற பணியாக, தனித்தமிழை வளர்த்தெடுக்கும் பணியாக, கொடுஞ்சட்டங்களை (தடா) எதிர்த்துச் சிறைக்களம் செல்கின்ற ஒரு போராளிப் பணியாகவே ஐயா அவர்களின் பணி இருந்திருக்கின்றது. செந்தமிழ் நாட்டைச் சிறை மீட்க இங்கு ஒரு வெந்தணலாக அவர்கள் விரைந்து வளர்ந்தார்கள். அவரின் கடும் உழைப்பின் காரணமாகத் தினமணி போன்ற நாளிதழ்கள்கூடத் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தின. தமிழறிஞராக தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழினத்திற்காகவும் வாழ்ந்த ஒரே தமிழ்ப் பெருந்தகை. தமிழ்ப் போராளி ஐயா அவர்களின் மறைவுக்குத்தான் ஒரு கடல் திரண்டதுபோல் மக்கள் திரண்ட காட்சியைக் கண்டேன். தமிழினத்துக்குப் பாடுபட்டால், தமிழுக்கு உண்மையாயிருந்தால், தமிழுக்கு உயிர்த்தொண்டாற்றினால் அவர்களை இத்தமிழகம் கைவிடாது என்பதை மெய்ப்பிக்கின்ற காட்சியாக அது அமைந்தது.

இறையழகன் (மறைமலையடிகள் மன்றத் தலைவர், திருக்கழுக்குன்றம்)

மறைந்த பல சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமை யாக்கியதுபோல, பாவலரேறு ஐயா அவர்களின் நூல்களையும் நாட்டுடைமையாக்க அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை பாவலரேறு ஐயா அவர்களின் குரல் தமிழ்நாடெங்கும், தமிழன் வாழும் நிலம் எங்கும் ஒலிக்கும்.

சாமி. மணி (மறைமலையடிகள் மன்றம், திருக்கழுக்குன்றம்)

பாவலரேறு ஐயா அவர்களின் கொள்கைகளை உயிர்மூச்சாகக் கொண்டு, தன்னலத்தை ஒதுக்கி வைத்துவிட்டுப் பொதுநலத்தில் அக்கறை கொள்ளவேண்டும். இங்குள்ள தமிழர்கள் எல்லாம் அரசியல், சாதி– மதங்களை மறந்து தமிழால் ஒன்றுபட்டுத் தென்மொழிப்படையை வளர்க்கவேண்டும். மறைமலையடிகளார்

சைவத்திலே சிறந்திருந்தாலும் அவர்களுடைய தனித்தமிழ்க் கொள்கையையும், தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கையினையும், மார்க்கசிய பொதுவுடைமை கோட்பாட்டையும் எடுத்துக்கொண்டு நல்ல பொதுவுடைமையாளர் ஒருவராகத் திகழ்ந் தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள்.

வ. **வேம்பையன்** (பகுத்தறிவுக் கழகம், மறைமலைநகர்)

மொழித்தூய்மை, இனத்தூய்மை, நிலத்தூய்மை இவற்றிற்காகத் தம் இறுதிமூச்சுவரை எழுதி மறைமலையடிகள், பாவாணர் ஆகியோர் வளர்த்த தனித்தமிழை பாவலரேறு ஐயா அவர்கள் எங்கும் பரப்பினார்கள். தென்மொழி ஓர் இதழன்று. அ்து ஓர் இயக்கம். அந்த இயக்கத்தை நாம் வளர்க்கவேண்டும். தமிழ்க் களத்தைக்கட்டி எழுப்பவேண்டும். அது தமிழுக்கு ஒரு பேரரணாக இருக்கவேண்டும். தென்மொழி வளர்ச்சிக்கொடை என்றும், தமிழ்க் களத்திற்குக் கட்டடக்கொடை என்றும் தனித்தனியாகத் திரட்ட ஐந்து கோடித் தமிழர்களையும் ஈடுபடுத்தவேண்டும்.

க. **வள்ளுவன்** (பாட்டாளி மக்கள் கட்சி)

பதினைந்து ஆண்டுகள் சிறையிலிருந்து மீண்டு பல அரசியல் தலைவர்களையும், தமிழறிஞர்களையும் சந்தித்தபோது, நீங்கள் ஒரு தமிழ்ப் போராளியாக எதிர்க்காலத்தமிழர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று தட்டிக்கொடுத்தவரும், கமுக்கமாக நடக்கவிருந்த என் திருமணத்தை குமுகாயத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று அவரின் தலைமையிலே நடத்தித் **'தமிழ்நிலம்'** வெளியீட்டு விழாவில் எங்களை அறிமுகப்படுத்தியவரும் பாவலரேறு ஐயா அவர்கள். இந்தத் தமிழறிஞரின் கனவுகளை, விட்டுச் சென்ற பணிகளை எந்த இயக்கத்தில் நாம் இருப்பினும் ஒருமுகப்பட்டு செயல்படுத்த வேண்டும்.

மலர் வெளியீடு

மருத்துவர் தொமினிக்கு சுவாமிநாதன் (மலர் வெளியீட்டுரை)

நாற்பதாண்டுகளாக ஓர் இதழ் நடத்தப்பட்டு வருவது தனி மாந்தர் ஒருவரின் பேராற்றலின் மிகப்பெரிய வெளிப்பாடு. தாமரையம்மையை ஏந்திப்பெற்ற குடும்பம் தனிக்குடும்பம். தமிழை ஏந்திப்பெற்ற குடும்பம் நாம் அனைவரும் சேர்ந்த தமிழ்க்குடும்பம்.

ஐயா அவர்கள் கூட்டத்தின்கண் வாழ்வியல் உண்மைகளை உணர்த்தி உரையாற்றுவதில் பேராற்றல் உடையவர்கள்.

தமிழாற்றலுடனும், மன ஆற்றலுடனும் தம் பாடல்களை இயற்றித் தம் இளங்குழவிக்கு மருத்துவம் செய்தவர்கள் ஐயா அவர்கள். அவர்களின் இயக்கம் தமிழர்கள் உள்ளவரை உறுதியுடன் இயங்கும்.

புலவர் கி.த. பச்சையப்பன் (ஏற்புரை)

பாவலரேறு தமிழ்க்களத்தைத் தமிழக அரசே கட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை அரசுக்கு முன்பே அனுப்பிவிட்டேன். இதனை அரசு செய்வதுதான் சரி. அரசு செய்வதற்கு நாம் ஆவன செய்ய வேண்டும்.

கருத்தரங்கம்

புலவர். இறைக்குருவனார் (தலைமையுரை)

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்த் 'தென்மொழி' தொடங்கப்பட்ட போது, இனவுணர்வையும் நாட்டுரிமையையும் உள்ளீடாகக் கொண்டு அவற்றிற்கு அடிப்படையான மொழிநலம் முன்னெடுக்கப்பட்டது. நம்முடைய இலக்குத் தெளிவாக இருந்தது போலவே, தமிழ் வளர்ச்சிக்குத் தடையாவன யாவை, நாம் யாரை எதிர்த்துப் போராட வேண்டும் என்பனவும் தெளிவாக இருந்தன. ஆனால், இன்றைய நிலை அப்படியில்லை. தமிழுக்கு உண்மை யிலேயே ஆக்கமாகச் செயல்படுகிறவர்களையும் அப்படிச் செயல்படுவது போல் வெளிப்படுத்திக்கொண்டு அதில் அக்கறை கொள்ளாமல் இருப்பவர்களையும் தட்டிக்கழிக்கும் போக்கில் நடந்து கொள்பவர்க ளையும் நம்மைத் திசைதிருப்ப முயல்கிறவர்களையும் நாம் எளிதில் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை; கண்டுகொண்டாலும் திகைத்து நிற்க வேண்டியுள்ளது.

இந்த நாற்பது ஆண்டுகளில் இடையிலே ஒருசிறு ஏற்பட்டாலும், இடையிடையே பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந் தமையால் அதன் வெளிப்பாடு எண்ணிக்கையளவில் குறைவு பட்டாலும் தென்மொழியின் களம் விரிவுபட்டிருக்கிறது; அது

தொடர்ந்து நடையிட்டு வருகின்றது; அதன் தொண்டு தொடர்கின்றது.

தென்மொழியின் தொண்டில் மொழியியல் பெற்றிருக்கும் இடம் எத்தகையது; இன எழுச்சியின் வீச்சு எப்படிப்பட்டது; நாட்டுரிமை பற்றிய உணர்வின் நிலை என்ன; தமிழின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் அடிப்படையான கலைச்சொல்லாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப் பட்டிருக்கும் பணியின் மதிப்பீடு என்ன; பொதுமை யியல் கோட்பாடு எத்தகைய இடத்தைப் பெற்றிருக்கிறது; குமுகவியல் பற்றிய பங்கு என்ன என்பன குறித்தும், அவற்றால் தமிழில், தமிழ் மக்களுடைய போக்கில், பல்வேறு துறைகளில் ஏற்பட்டிருக்கும் தாக்கம் எத்தகையது என்பது பற்றியும், இவற்றின் அடிப்படையில் நம்முடைய இலக்கை எய்துதற்கு இனி நாம் எத்தகைய முயற்சிகளை மேற்கொள்வது என்பது பற்றியும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக – நமக்கு நாமே மனஎழுச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.



பேரா. அரசேந்திரன்

பாவலரேறு ஐயா அவர்களின் மொழி, இன, நாட்டுக் கருத்துகளை நினைவில் கொள்வதென்பதே தமிழன் வாழ்வதற்குரிய வழியாகும். ஆரியர்க்குப் பாய்விரித்தாய், ஆங்கிலர்க்குக் கற்பிழந்தாய் – என்ற கருத்துகளுடன், இந்தியைத் திணிக்கக்கூடாது என்று வடவர்களுக்குக் கூறியும், இணங்கார் எனின் தமிழகம் விழித்தெழும் என்று ஐயா அவர்கள் தம்பாடலில் குறிப்பிடுகின்றார்கள். ஆனால், இன்றைய ஆட்சி நிலையில் நாம் ஏமாற்றம் அடைந்து கொண்டுள்ளோம்.

மா. பூங்குன்றன்

தென்மொழிக்குத் தொடர்புடைய அனைவரையுமே ஒரே குடும்பத்தினராக ஐயா அவர்கள் எண்ணினார்கள். குடும்ப

உறுப்பினர்கள்வேறு, தென்மொழி அன்பர்கள்வேறு என்ற பிரித்துணர்தல் இன்றி இயங்கிய ஐயா வழியே நாங்கள் அனைவரும் இயங்குகிறோம்.

பொறியியலிலோ, மருத்துவத்திலோ இன்று போதிய கலைச் சொல்லாக்கம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்றாலும், தனித்தமிழ் விழித்தெழுந்த நிலையில் தென்மொழி, அறிவியல் கட்டுரைகள் மூலம் பல கலைச்சொற்களை உருவாக்கித் தந்திருக்கிறது. தென்மொழி படித்தவர்களும், படித்துக்கொண்டிருப்பவர்களுமே தேவையான இடங்களில் கலைச்சொற்களைத் தாங்களே உருவாக்கும் திறனை ஓரளவில் பெற்றவர்களாகவே உள்ளனர். அப்படிப்பட்ட திறன்தான் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும். எனவே அனைவரும் கலைச் சொற்களை உருவாக்கிக்கொள்ளும் திறனைப் பெறுவதற்கு அறிஞர்கள் சிந்திக்கவேண்டும்.

அரு. கோபாலன்

உலக அரசு அமைந்தால்தான் மக்களுக்கு உய்வு ஏற்படும் என்ற நிலை ஏற்படுமானால் ஆட்சிமொழியாக, பயிற்றுமொழியாக அவரவர் சொந்த நிலத்தில் அவரவர் தாய்மொழி அமையவேண்டும் என்பது பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ஆழமான கருத்து. 1965-இல் முதன்முதலில் தென்மொழி இயக்கம் நடத்திய மொழிப் போரின் பயனாகத்தான் இன்று திராவிட ஆட்சி நடைபெறுகிறது. மொழியை அடிப்படையாகக் கொண்ட போராட்டமே இன எழுச்சியை உருவாக்கும்.

ஆனூர் செகதீசன்

திராவிடர் கழகத்தில் ஐயா பெரியார் காலத்திலிருந்தே தனித் தமிழுக்குச் சிறப்பிடம் கொடுக்கவில்லை. பாவலரேறு ஐயா உருவாக்கிக் கொடுத்த சொற்கள் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மொழியால்தான் அனைவரையும் இணைக்கமுடியும் என்ற சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது என்று சொன்னால் அதற்குப் பாவலரேறு ஐயா அவர்கள்தாம் முழுமையான கரணியம். அவர்களைப்பற்றி அனைத்துச் சிற்றூர்ப்புறங்களிலும்கூடத் தெரிவிக்க வேண்டும். ஐயா முதலான சான்றோர்கள் தமிழினம் தொடர்பாகக் கூறிய கருத்துகளைத் தயங்காமல் பரப்பி இத் தமிழ் நிலத்தை முன்னிறுத்துவது நம் அனைவருடைய கடமையுமாகும்.

நன்றியுரை

பூங்கயல் அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை கூறினார்.

‘திருக்குறள் மெய்ப்பொருளுரை — ஓர் அறிமுகம்’

(இந்தியப் பல்கலைத் தமிழாசிரியர் மன்ற 29ஆம் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை)

திருக்குறள் ஓர் அறநூல். மாந்த வாழ்வின் ஒழுகலாறுகளை வகுத்தும் தொகுத்தும் எடுத்துரைக்கும் வாழ்வியல் நூல். சுருங்கி நின்று அகலம் காட்டும் பொதுமை நூல். முன்னாளில் பரிமேலழகர் உள்ளிட்ட பதின்மர் இந் நூலுக்கு உரை எழுதினர். இந்நாள்வரை நூற்றுக்கணக்கானோர் உரை எழுதியுள்ளனர்; தொடர்ந்து எழுதியும் வருகின்றனர். அண்மையில் வெளிவந்துள்ள பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் திருக்குறள்மெய்ப்பொருளுரையை (உரைச் சுருக்கம்) அறிமுகம் செய்வதே கட்டுரையின் நோக்கம்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணாரின் தலை மாணாக்கர். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகிய இதழ்களின் ஆசிரியராய் இருந்தவர். புரட்சிப் பாவலர் பாரதிதாசனைப் போன்ற பெரும்பாவலர். பன்னூல் ஆசிரியராகிய இவர் திருக்குறளில் பெரிதும் தோய்ந்தவர். உள்நாட்டுப் பாதுகாப்பு என்னும் கொடிய அடக்குமுறைக் கடுஞ் சட்டத்தின் கீழும் (MISA) அதனைத் தொடர்ந்த ஒடுக்குமுறைக் கொடுஞ் சட்டத்தின் கீழும் (TADA) சிறைப்படுத்தப்பட்டிருந்த போது உடனிருந்த சிறையாளிகளின் வேண்டுகோட்கிணங்க அங்குத் திருக்குறள் வகுப்புகள் நடத்தியவர். சிறைவாழ்வைச் சீரிய வாழ்வாய்க் கருதித் திருக்குறளுக்கு இதுவரை எவரும் எழுதிடாத, புதுவதான மெய்ப்பொருளுரை எழுதும் முயற்சியை மேற்கொண்டவர்.

இதுவே மெய்ப்பொருளுரை எனில் ஏனையோரது பொய்ப் பொருளுரையோ எனக் கருத வேண்டுவதின்று. முதல் நூறு குறட் பாக்களுக்கு இவர் எழுதிய உரைமட்டுமே 340 பக்கங்களில் பெரும் நூலாய் மலர்ந்துள்ளது.

திருக்குறளுக்கு உரையெழுதிய முற்கால, பிற்கால உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ள பொருந்தாக் கருத்துகளைச் சுட்டிக்காட்டிக் கண்டித்திருப்பதுடன் அவற்றுக்குத் தாம் கண்ட மெய்ப்பொருளையும் தெளிவுப்படுத்தியுள்ளார். அன்றியும் ஆரிய நச்சுக் கருத்துகள் இவை; அருந்தமிழ் நற்கருத்துகள் இவையென வேறுபடுத்தி விளக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

— முனைவர் கடவூர் மணிமாறன் —

பரிமேலழகர் முதல் பாவாணர் வரை பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஏற்றும் மறுத்தும் எழுதப்பெற்ற விளக்கங்களைக் கொண்டதும் நூற்றுக்கணக்கான நூல்களில் இருந்து மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் எடுத்தாளப்பெற்றதுமாய் இந்நூல் இலங்குகின்றது.

ஆடவர்க்கும் கற்பு

திருக்குறள் மதவியல் சாராத நூலாக மட்டுமன்றி உலகப் பொது மாந்தவியலுக்கும் அறவியலுக்கும் மாறுபடாத நூலாதலின் இதில் எங்கும் பெண்மையை, இகழ்ந்தோ, இழிவுபடுத்தியோ, தாழ்த்தியோ கூறப்பெறவில்லை. அதுபோல ஆண்மையை உயர்த்தியோ, பெருமைப்படுத்தியோ, புகழ்ந்தோ எவ்விடத்தும் கூறப் பெறவில்லை என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றார்.

மகளிர்க்கு மட்டுமே கற்பை வலியுறுத்திவிட்டு ஆடவர்க்கு அதனை வலியுறுத்தாதது மட்டுமன்றி அவர்தம் பரத்தமை வாழ்வையே பாராட்டும் முன்னை நிலைக்கு மாறாக ஆடவர்க்கும் திருவள்ளுவர் கற்புநிலையை வலியுறுத்துகின்றார் என்பதை,

> 'ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
> தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'

என்னும் குறட்பாவில் சுட்டியுள்ளார் என்பதை எடுத்துரைக்கின்றார்.

பெண்வழிச்சேறல்

பெண்வழிச்சேறல் அதிகாரத்துள் கூறப்பெறும் கருத்துகள் பெண்ணை அல்லது பெண்மையை இழிவுபடுத்துவனவாகச் சிலர் கருதுவர். அவ்வதிகாரத்துள் கூறப்பெறும் அனைத்தும் மனவியல், அறிவியல், உடலியல், வாழ்வியல் சார்ந்த அறிவியல் கருத்துகளே ஆகும். பெண்ணின்பத்துத் தலை, கால் தெரியாமல் தறிகெட்டு மனைவி உள்பட வேறு பெண்டிர் சிலரிடமும் அளவிறந்த கழிகாம ஈடுபாடுகொண்டு திரியும் வெறியர் சிலரைத் தம் உள்ளத்தையும் அறிவையும் உடலையும் நோக்கத்தையும் கெடுத்துக் கொள்ளாமல் தடுத்து நிறுத்தி நல்வழியில் உய்விக்க வேண்டி அருள் உள்ளத்துடன் கூறிய கருத்துகளே இவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன என்று குறிப்பிடுகின்றார்.

வரைவின் மகளிர்

வரைவின் மகளிர் என்னும் இவ்வதிகாரமும் பெண்கட்கு இழிவு சேர்ப்பதாகக் கூறப்பெறுவதுண்டு. பெண்மையை விலைபோக்கி வாழ்வு செய்யும் மாந்தக்கீழ்மை உலக நாடுகள் அனைத்திலும் இவ்வுலக மாந்தவியக்கம் தொடங்கிய நாள்முதல் அனைத்து அறிவியல் கூறுகளும்

அளவிறந்து முன்னேறியுள்ள இந்நாள்வரை உண்டு என்பதை அனைவரும் அறிவர். இதுவும் மக்கட்கு இவ்வழி எச்சரிக்கை செய்வதற்கே எழுதப் பெற்றதாகும். அறவழி ஆசிரியர் ஒருவர் மனவியல் அறிவுகொண்டு பெண்பித்தர்க்கு அருள் நோக்கோடு கூறிய கருத்துகளாம் இவை. பெண்களை இழிவு படுத்துவன அல்ல என்று உறுதிபட உரைக்கின்றார் உரையாசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள்.

பெறுமவற்றுள்....

இல்வாழ்க்கை மேற்கொண்டவர்கள் பெற வேண்டியனவாக முற்கூறப்பெற்ற ஆக்கங்களோடு (அழகு, அறிவு, ஆற்றல், இளமை, நுகர்ச்சி, கல்வி, புகழ், நோயின்மை, துணிவு, நெல், பொன், வெற்றி, பெருமை, நன்மக்கள், நல்லூழ், வாழ்நாள் ஆகிய பதினாறு) அறவியலும் வாழ்வியலும் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் தன்மானம், உரிமை, தொண்டுணர்வு முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம் என உரை வழங்கும் பெருஞ்சித்திரனார், “அறிவறிந்த என்ற அதனான் மக்கள் என்னும் பெயர் பெண் ஒழிந்து நின்றது” என்று பரிமேலழகர் கூறியிருப்பது தம் ஆரியவியலின் தாழ்வுணர்வை நூலாசிரியர்மேல் ஏற்றிக் கூறுவதுடன் அவரைப் பழித்தலுக்கும் இழித்தலுக்கும் உள்ளாக்கும் கொடுமையும் குற்றமுமாம் என உள்ளம் குமுறுகின்றார்.

இதை அறிவியலும் உரிமையியலும் சமவுடைமையியலும் வளர்ச்சி பெற்ற இக்காலத்தும் பாவாணர் போன்றோர் கண்டியா ததும் கண்டும் காணாதது போலிருந்ததும் அக்குற்றத்திற்கு வழி விட்டது போலாம் என்றும் வருந்துகின்றார்.

அந்தணர்

அந்தணர் எனில் அந்தண்மையுடையவர்கள். அந்தண்மை — செவ்விய குளிர்ந்த தன்மை. எவரிடத்தும் எப்பொழுதும் எந் நிலையிலும் மனவெறுக்கை, அறிவுவேறுபாடு, செயல்வெறுப்பு ஆகிய வற்றான்முகச் சுழிப்பும், கடுகடுப்பும் இல்லாமல் நடந்துகொள்ளும் குளிர்ந்த நீர்மைத் தன்மை என்றும் அறவோர் என்பவர் உலகின்பங்களைப் பிறர்நலம் கருதித் தவிர்த்துக்கொண்ட பேரறிவா ளர்கள், அறிவர்கள் ஆவர் என்றும் விளக்கம் தருகின்றார்.

எழுபிறப்பு

சிலர் எழுபிறப்பு, எழுபிறவி என்பதை ஏழு மக்கள் பிறப்பு என்றும் சிலர் நிலைத்திணை (தாவரம்) நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள், மாந்தர், தேவர் என்று ஏழுவகைப் பிறப்புகள் என்றும் மாறுபடக் கூறுகின்றனர். வள்ளுவரைப் பொறுத்தவரை

எழுபிறப்பு, எழுமை, எழுமைஎழுபிறப்பு என மூவகையாகப் பிறவிகளைக் குறிக்கின்றார். அவை *62, 107, 126, 398, 638, 835* என்னும் ஆறு குறட்பாக்களில் மட்டுமே குறிக்கப்பெறுகின்றன.

திருவள்ளுவர் பிறவிக் கொள்கையுடையவர். உயிர்கள் தம்தம் வாழ்முறை விளைவுகளுக்கு ஏற்ப அடுத்தடுத்துப் பல பிறவிகளை எய்துகின்றன என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்றும் அந் நம்பிக்கையை அவர் பல இடங்களில் தெரிவித்துள்ளார் என்றும் உயிர்கள் பல பிறவிகள் எய்துகின்றன என்று கருதுகிறாரே தவிர, அவை ஏழு பிறவிகள் மட்டுமே எடுப்பதாக நூலுள் எங்குமே அவர் கூறவில்லை என்றும் **எழுமை** என்பதற்கு எழுகின்ற (பிறக்கின்ற) பிறவிதோறும் என்றும், **எழுபிறப்பு** என்பதற்கு ஒருவரைத் தொடர்ந்து வரும் ஏழு; அஃதாவது சில அல்லது பல என்னும் குடும்பத் தலைமுறைகள் என்றும், **எழுமை எழுபிறப்பு** என்பதற்கு ஒருவர்தாம் எழுகின்ற பிறவிதோறும் அதேபோல் அவரை அடுத்தடுத்துத் தோன்றுகின்ற சில அல்லது பல குடும்பத் தலைமுறைகள் தோறும் என்றுமே பொருள் கொள்ளமுடியும் என்றும் தெளிவுபடுத்துகின்றார்.

தென்புலத்தார்

தெற்கில் உள்ள நிலத்தவரே தென்புலத்தார் என்றும் தமிழ் நாட்டின் தெற்குப்புலத்தில் உள்ள இலங்கை, பிசி, மொரீசியசு, சிங்கை, மலேசியா, ஆப்பரிக்கா, ஆத்திரேலியா, மடகாசுகர் முதலிய தென்புலங்களில் எல்லாம் சிதறிவாழும் தமிழர்களையும் குறித்த தெனவும் பொருள் கொள்கிறார்.

இயல்புடைய மூவர்

இயல்புடைய மூவர் என்பதற்குத் தம்தம் இயல்புகளினின்று மாறாத தன்மைகளைக் கொண்ட உறவோர், அறவோர், இறைவோர் (ஆட்சியர்) ஆவர் என்பதே மிகவும் பொருத்தமும் நடைமுறையும் உடைய பொருள் என்னும் பெருஞ்சித்திரனார், ஏனையோர் அனைவரின் உரைகளையும் மறுத்துள்ளார். கற்பு என்பது மனவுறுதி என்றும், தவம் என்பது தன் உடல் நலனுக்கும் மகிழ்விற்கும் அறிவுக் கூர்மைக்கும் செய்யப்பெறும் நோன்மை முயற்சி என்றும், தானம் என்பது (தா என்னும் வேரடியாகப் பிறந்த தூய தமிழ்ச்சொல்) பிறர்நலனுக்கும் மகிழ்ச்சிக்கும் பயனுறுத்துவதைக் கொடுத்தல் என்றும், நல்குதல் என்பது பெற்றதைத் திரும்பத் தருதல் என்றும் புதிய நோக்கிலும் மெய்யறிவுப் பார்வையிலும் உரை கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

பெய்யெனப் பெய்யும் மழை

பெய் என்று சொன்னவுடனேயே பெய்யும் மழையைப் போன்றவள் என்று பாரதிதாசன் பொருள் கூறுவார். அது திருவள்ளுவர் கருத்தாகாது என்றும், வீசென வீசும் காற்று, தோன்றெனத் தோன்றும் கதிர் என்பன போன்றது பெய்யெனப் பெய்யும் மழை என்பதும் என்றும், இதை இல்பொருள் உவமையாகக் கொண்டால்தான் பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள் என்று பொருள் கொள்ளமுடியும் என்றும், 'பெய்' என்று யார் சொன்னாலும் மழை பெய்யாது; அஃது இயற்கை அன்று; இறும்பூது கற்பனை என்றும் விளக்கம் அளிக்கின்றார் பெருஞ்சித்திரனார்.

துப்பு

'துப்பார்க்குத் துப்பாய' என்னும் குறளில் இடம்பெற்றுள்ள துப்பு என்பது துய்ப்புப் பொருள்கள் அனைத்தையும் குறிக்கும் ஒருசொல் என்கிறார். அற்றைப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள் முதல் இற்றைப் பாவாணர் உள்ளிட்ட அனைத்து உரையாசிரியர்களும் 'துப்பு' என்பதற்கு உணவு என்று மட்டுமே பொருள் கொண்டது குறையுரையாம் என்பதற்கு,

'அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும்
துணையும் வலியும் பொலிவும் நெய்யும்
அனுபவமும் தூய்மையும் துப்பு எனலாகும்'

என்ற பிங்கலந்தை நிகண்டினை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

உரன் என்னும் தோட்டி

உரன் என்னும் தோட்டி என்பதற்கு அறிவு என்னும் கதவு எனப் பொருளுரைக்கிறார். இதற்குத் துறட்டி, யானைக் குடாரி என்னும் பொருள் கொண்டும் அதையொட்டி ஓர் ஐந்தும் என்பதற்கு ஐந்து பொறிகளாகிய ஐந்து யானைகள் என்று கொண்டும் இதற்கு முன் பரிமேலழகர் முதல் பாவாணர் வரையுள்ள உரையாசிரியர்கள் அனைவரும் குன்று முட்டிய குருவிபோல் இடர்ப்படுவர் என்றும் குறிப்பிட்டுப் பொறிகளின் ஐந்து வாயில்களையும் தேவையில்லா விடத்து அறிவு என்னும் கதவை அடைத்துக் காத்துக் கொள்வதே இங்கும் கூறப்பெறுவதாகலின் அதுவே சாலப் பொருந்தும் உருவகமாம் என்கிறார். வள்ளுவரே நிறை என்னும் கதவை நாணம் என்னும் தாழ் அடைத்து நிற்பதாக,

'காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு' *(1251)*

என்னும் குறளில் கூறியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

வானத்தவர்

நல்விருந்து வானத்தவர்க்கு என்பதற்கு உரையெழுதுமிடத்துத் திருவள்ளுவரும் அறிவியல் விளங்காத மதவியலே வாழ்வியலாகக் கருதிய, ஆரியர்தம் கள்ளமும் கரவும் சூழ்ச்சியும் மாட்சியும் கையோங்கி வந்துகொண்டிருந்த அற்றைப் பொழுதில் வாழ்ந்த பெருந்தமிழ்ச் சான்றோர் எனினும் மூடநம்பிக்கைகளின் முழுமைத் தன்மையும் நன்கு விளங்காதவராகவே சிற்சில விடங்களில் கருத்தறிவித்துச் செல்வர் என்று உரையாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உரைக்கின்றார்கள்.

முடிவுரை

திருக்குறளுக்கு உரை தீட்டுவதில் புதிய வரலாறு படைக்க முனைந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். அவரின் எதிர்பாராத மறைவால் திருக்குறள் முழுமைக்கும் மெய்ப்பொருளுரை கிடைக்காது போயிற்று. ஆழந்தகன்ற தமிழ்ப்புலமையும் பன்னூற் பயிற்சியும் ஒப்புநோக்கியும் உறழ்ந்தும் பார்க்கும் ஆய்வுநோக்கும் திட்பமும் செறிவும் அமைந்த கருத்து விளக்கமும் மெய்ப் பொருளுரைக்குப் பொலிவும் வலிவும் சேர்ப்பனவாய் உள்ளன.

❖

தென்மொழி நன்கொடை வரவுகள்

(1-4-98 முதல் 30-6-98 முடிய)

1.	இரா. பதுமநாபன்	மதுரவாயல்	25.00
2.	இரா. கவின்பணிஞன்	புதுக்கோட்டை	10.00
3.	த. பாப்பாத்தி	நிலக்கோட்டை	200.00
4.	பாவலர் த. தமிழேந்தி (மகள் அருவி – மதியழகன் திருமண மகிழ்வின் நன்கொடை)	அரக்கோணம்	100.00
5.	இரா. கவின்பணிஞன்	புதுக்கோட்டை	10.00
6.	மருத்துவர் நலங்கிள்ளி	பொன்னேரி	46.00
7.	ஆ. சீத்தலைச்சாத்தனார் (ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றமை குறித்த நன்கொடை)	உ. செல்லூர்	100.00
8.	வ. வேம்பையன்	கல்பாக்கம்	100.00
9.	கோ. நக்கீரன்	சோளிங்கபுரம்	50.00
10.	மு. நாச்சியார் (பாவலரேறு ஐயா அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவுக்காக விடுக்கப்பெற்றது)	புதுத்தில்லி	151.00

செய்திகள்

உலகமதி தமிழ்க்குடும்ப ஆண்டுவிழா.

சேலம் மாவட்டத்துப் பொன்னாவாரம்பட்டியிலுள்ள நாவல் மரத் தோட்டத்தில் உலகமதி தமிழ்க்குடும்பத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா, தி.பி. 2029 விடை 3 ஞாயிறு (17.5.98) அன்று மாலை 5 மணிக்கு வழக்கறிஞர் மு. மாரிமுத்து அவர்கள் தலைமையிலும் திரு. அறவாழி தமிழரசி முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. ஈச. பெருமாள் வரவேற்றுப் பேசினார். பொறிஞர் பெ. இரத்தினம், ஆசிரியர் அ. செங்குட்டுவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

கல்விநலம் பாராட்டு நிகழ்ச்சியில் எழுவரைப் பாராட்டித் திரு. இரத்தினம் பூங்கொடி பரிசளித்தார். இல்லற நலம் பாராட்டுதலில் வாழ்விணையர் மூவர்க்கு நெய்வேலிப் பாவாணர் தமிழ்க்குடும்பச் செயலாளர் பாவலர் அன்புவாணன் பரிசளித்துப் பாராட்டுரை வழங்கினார்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார், எழுவர்தம் தொழில் நலம் பாராட்டிப் பரிசளித்து விழாச் சிறப்புரையாற்றினார்.

தமிழ்வழிக் கல்விப் பேரணி – மாநாடு.

தமிழுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்வழிக் கல்வி மாநாடு தி.பி. 2029 விடை 31 ஞாயிறு மாலை 5.30 மணிக்குச் சென்னை – வடபழனித் திரைப்பட இசைக்கலைஞர்கள் மன்ற அரங்கில் திரு. அ. பதுமநாபன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முனைவர் அரணமுறுவல் வரவேற்புரை யாற்றினார்.

திரு. இராசேந்திர சோழன், முனைவர் இரா. இளவரசு, புலவர் இறைக்குருவனார், திருவாளர்கள் நன்னன், மா.செ. தமிழ்மணி, திரு. க.ப. சின்னராசு, புலவர் செகதீசன் முதலானோர் தமிழ்வழிக் கல்வியின் இன்றியமையாமை குறித்தும், தமிழ்நாட்டரசின் போக்கைக் கண்டித்தும் உரையாற்றினர். இந்தக் கல்வியாண்டிலேயே பொறியியல் மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வித் துறைகளில் தமிழ்வழிப் பயிற்சியைத் தொடங்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக மாலை 4.30 மணிக்குக் கோடம்பாக்கம் அம்பேற்கர் சிலையிலிருந்து கூட்டமைப்பின் தலைவர் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் தலைமையில் பேரணி புறப்பட்டு முழக்கங்கள் எழுப்பியவாறு மாநாட்டு அரங்கத்தையடைந்தது. எழுகதிர் ஆசிரியர் அரு. கோபாலன், புலவர் குமர. தன்னொளியன், திண்டுக்கல் தமிழ்க்கதிர் உள்ளிட்ட தமிழறிஞர்கள் பேரணியிலும் மாநாட்டிலும் கலந்துகொண்டனர்.

'தனித்தமிழ்' பற்றி ம.தி.மு.க. பயிற்சிப் பாசறையில் விரிவுரை.

காஞ்சிபுரம் மாவட்ட ம.தி.மு.க. சார்பில் மூன்று நாள் நீலாங்

கரையில் நடைபெற்ற பயிற்சிப் பாசறையின் இரண்டாம் நாளான தி.பி. 2029 ஆடவை 8 திங்களன்று (22.6.98) பிற்பகல் நிகழ்ச்சியில், அக் கழகத்தினர்தம் வேண்டுகோட்கிணங்கத் 'தனித்தமிழ்' என்னும் பொருள் பற்றித் திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் உரைநிகழ்த்தினார். நிகழ்ச்சிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ தலைமைதாங்கினார்.

பாவலரேறு நினைவுநாட் பொதுக்கூட்டங்கள்

சென்னை –திருவொற்றியூர் பாவேந்தர் தமிழ்ப்பேரவை, எண்ணூர் திருவள்ளுவர் தமிழ்ப்பேரவை, இளைஞர் விழிப்புணர்வு இயக்கம் ஆகிய அமைப்புகளின் சார்பில் எண்ணூர், திருவொற்றியூர் ஆகிய இடங்களின் தமிழ்த் தேசிய எழுச்சிப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

எண்ணூர்:

தி.பி. 2029 ஆடவை 11 வியாழன் (25.6.98) இரவு 7 மணிக்கு, எண்ணூர் அன்றாட அங்காடி அருகில் பாவலரேறு நினைவேந்தல் – தமிழ்த்தேசிய எழுச்சிப் பொதுக்கூட்டம் திரு. நாராயணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. செந்தில்குமார் (திருவள்ளுவர் தமிழ்ப்பேரவை) வரவேற்புரையாற்றினார்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் (தென்மொழி அவையம்), புலவர் தமிழ்மாறன் (தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி), திரு. அன்பு தென்னரசு (தமிழ் தமிழர் இயக்கம்) திரு. பெ. க. இரவிச்சந்திரன், (பழந்தமிழர் ஊழியர் நலச்சங்கம்), திரு. தீபன் அமல்ராசு (பெரியார் திராவிடர் கழகம்), திரு. அன்புச் செழியன், திரு. அருண் (பாவேந்தர் தமிழ்ப்பேரவை), திரு. பார்த்திபன் (தி.த.பே), திரு. சுப. குணசேகரன் ஆகியோர் உரையாற்றினார். திரு. சரவணன் (தி.த.பே.) நன்றி நவின்றார்.

திருவொற்றியூர்:

தி.பி. 2029 ஆடவை 12 வெள்ளி (26.6.98) இரவு 7 மணிக்குத் திருவொற்றியூர்த் தேரடியில் திரு. தெ. மு. இளமாறன் (பாவேந்தர் தமிழ்ப் பேரவை) தலைமையில், பாவலரேறு நினைவேந்தல் – தமிழ்த் தேசிய எழுச்சிப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. அருண் (பா.த.பே.) வரவேற்றுப் பேசினார்.

தஞ்சை – தமிழ்ப்பல்கலைக் கழகத் தூய தமிழ் அகர முதலிகள் துறைத் தலைவர் சொல்லாய்வு அறிஞர் அருளியார், புலவர் தமிழ் மாறன் (தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி), திரு. இளங்கோ (த.நா.மா.இலெ.), திரு. அறிவுடைநம்பி (பைந்தமிழ்ப் பாசறை), திரு. செந்தமிழ்ச் செல்வன் (திருவள்ளுவர் தமிழ்மன்றம்), திரு. மனோகரன் (திருவள்ளுவர் தமிழ்ப் பேரவை) ஆகியோர் உரையாற்றினர். திரு. அ. மதியழகன் (பா.த.பே.) நன்றி நவின்றார்.

அருவி – மதியழகன்(சோமசுந்தரம்) வாழ்க!

பாவலர் தமிழேந்தி – அரசி (சோ. சு. யுவராசன் – இராணி) ஆகியோர் மகள் அருவி, மதுரை சா. பரமசிவம் – மரகதம் ஆகியோர் மகன் மதியழகன்(சோமசுந்தரம்) இவர்தம் திருமணம் 11.5.98 அன்று காலை வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் பொறியாளர் பொன். தேசராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மண விழாவினைத் திரு. வே. ஆனைமுத்து அவர்கள் நடத்திவைத்தார். இராசேந்திர சோழன், முகிலன், சங்கமித்ரா, சா. குமாரசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.மணமக்கள் நீடு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

உ. திருமலர் – ஒளிச்செல்வன்(சோதீசுவர்) வாழ்க!

நீண்டநாள் தென்மொழி அன்பரும், வாழ்நாள் உறுப்பினருமான திருப்பத்தூர் புலவர் கோ. உள்ளொளி–உ. உருசியா இணையரின் மகள் செல்வி திருமலர்க்கும் சித்தூர் ஏ.கே.எசு. மணி அவர்களின் மகன் செல்வன் பொறிஞர் ஒளிச்செல்வனுக்கும்(சோதீசுவர்) தி.பி. 2029 விடை 13 அறிவன் 27.5.98 அன்று திருப்பத்தூரில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் நீடுவாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

இரா. திருமுருகன் – இ. கவின் வாழ்க!

'தென்மொழி' அன்பரும், புரப்பாளருமான கரூர் மருத்துவர் சி. இராமச்சந்திரன்–பார்வதி இணையரின் மகன் மருத்துவர் திருமுருகனுக்கும் தென்மொழி அன்பரும் தனித்தமிழ் ஆர்வலருமான மருத்துவர் பொ. இளங்கோ அவர்களின் மகள் கவினுக்கும் தி.பி. 2029 விடை 22 வெள்ளி 5.6.98 அன்று ஈரோடையில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் நீடினிது வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

விண்மீன்பாண்டியன் – தென்மொழி மணவிழா.

தென்மொழியின் மேனாள் உறுப்பாசிரியர் பேரா. ம. இலெனின் தங்கப்பா – தடங்கண்ணி இணையர் மகன் விண்மீன் பாண்டியனுக்கும் பாவலர் இளஞ்சித்திரன் – காமாட்சி இணையர் மகள் தென்மொழிக்கும் தி.பி. 2029 ஆடவை 20 காரி (4.7.98) அன்று முற்பகல் 10 மணிக்கு, சென்னை, பல்லாவரத்தில் தமிழ் ஆட்சிமொழி–பண்பாடு மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையிலும் தென்மொழி ஆசிரியர் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும் திருமணவிழா சிறப்புற நடைபெற்றது. பேரா. ம.இலெ. தங்கப்பா வரவேற்புரை யாற்றினார்.

மணமக்களை வாழ்த்திச் சொல்லாய்வு அறிஞர் அருளியார், திரு. சு. இராமநாதன், பாவலர் கோவேந்தன், நடுவர் திருக்குறள் சி. இராம கிருட்டிணன், திரு. பெ. மணியரசன், திரு. மா.செ. தமிழ்மணி மற்றும் பலர் உரையாற்றினர். பாவலர் இளஞ்சித்திரன் நன்றி நவின்றார். ●

நூல் அறிமுகம்

அடிச்சுவட்டில்...

ஆசிரியர் : **இறை. பொற்கொடி,** 31. அப்பர்சாமி கோயில் தெரு, மயிலார்ப்பூர், சென்னை–4, பக். 24. விலை : உரு. 5.00.

"ஒரு வெற்றுப் பெருமூச்சுடன் என் நினைவுகளில் கனன்று, பற்றி எரிகின்ற பாவலரேறு ஐயா அவர்கள் பற்றிய நிகழ்வுகளில் ஒன்றையே எழுத்தோவியமாகப் பதிக்க எண்ணினேன். எனக்குக் கிடைத்த பட்டறிவு பல. அவருள் எழுகின்ற ஒவ்வொரு எண்ணமும் ஒரு 'வித்து'. அவர் ஊட்டிய உணர்வன்றி வேறு உணர்வு எமக்குத் தெரியாது!"

குழூஉக்குறி காட்டும் வாழ்வியல் நெறி!

ஆசிரியர் : பாவலர் **ம. புகழேந்தி**, தையல்நாயகி பதிப்பகம், காமராசர் சாலை, இலாலாப்பேட்டை – 639 105. கரூர் மாவட்டம், பக். 96. விலை : உரு. 20.00.

வெற்றிலை வணிகர்கள் பயன்படுத்தும் குழூஉக்குறிச் சொற்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரை நூல் இது. ஏராளமான பழங்குறிப்புகளை மட்டுமல்லாமல், வெற்றிலையைப் பயிரிட்டவகைப் பயிற்சியோடும் வணிகம் செய்த பட்டறிவோடும் இந்நூல் ஆய்வு நிலையில் அமைந்துள்ளது.

சிந்தனைச் சுடர்

ஆசிரியர் : திருக்குறள் மாமணி குறளன்பன் **ஆ.வே. இராமசாமி,** திருவள்ளுவர் பதிப்பகம், வைரிசெட்டிப்பாளையம் – 621 012. பக். 40. விலை : உரு. 5.00.

"திருச்சி வானொலியில் ஒலிபரப்பாகிய சிந்தனைச்சுடர் பகுதியில் முறையே ஒழுக்கம் விழுப்பந்தரும். ஒத்ததறிவான் உயிர் வாழ்வான், கற்றிலனாயினும் கேட்க ஆகிய தலைப்புகளில் பேசியவற்றைச் சில கூட்டல் கழித்தல்களுடன் இந்நூலில் தொகுத்துள்ளேன்."

முயற்சி திருவினையாக்கும்

ஆசிரியர் : திருக்குறள் மாமணி குறளன்பன் **ஆ.வே. இராமசாமி,** திருவள்ளுவர் பதிப்பகம், வைரிசெட்டிப்பாளையம் – 621 012. பக். 176. விலை : உரு. 35.00.

எளிய குடும்பத்தில் பிறந்து முயற்சியால் முன்னேறி, இருபதுக்கு மேற்பட்ட நூல்களுக்கும் பத்துக்கு மேற்பட்ட விருதுகளுக்கும் உரியவரான இந்நூல் ஆசிரியரின் வாழ்க்கைக்குறிப்பு.

த.நா.செ. (ந) மா. 7211 பதிவு எண் : 8119/63 தென்மொழி

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்,
தமிழர் கொற்றம் சார்பில்
பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின்
மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

நாள் : தி.பி. 2029 கடகம் 10 ஞாயிறு (26.7.98)
மாலை 4.30 மணி

இடம் : ஈரோடை, சிவரஞ்சனி விடுதி—அரங்கம்

தமிழ் வாழ்த்து : புலவர் **கொ. இராமலிங்கம்**
தலைமை : திருக்குறள்மணி **இறைக்குருவனார்**
முன்னிலை : திரு. **செ. நா. குப்பமுத்து ஐயா**
வரவேற்புரை : திரு. **குறிஞ்சி** (தமிழர் கொற்றம்)
பாவலரேறு படத்திறப்பு : உ.த.மு.க. பொதுச் செயலர்
திரு. **மா.செ. தமிழ்மணி**
பாவலரேறு நினைவுப் பா : பாவலர் **அருணா பொன்னுச்சாமி**

நினைவேந்தல் உரை

உரையாற்றுவோர் :

திரு. 'பாவேந்தர்' **இராமலிங்கம்** (பாவேந்தர் மன்றம்)
திரு. **தி.அ. சண்முகசுந்தரம்** (திருக்குறட் பேரவை)
திரு. **கி.வே. பொன்னையன்** (த.நா.மா.இலெ.))
திரு. **க. முருகேசன்** (மா. தமி. கழகம்)
புலவர் **சோ.க. அறிவுடைநம்பி** (உ.த.மு.க.)
திரு. **வேலிறையன்** (ஆய்வகம்)

பாராட்டு நிகழ்ச்சி:

பாராட்டுப் பெறுவோர் : பாவலர் **இரா. வடிவேலனார்**
புலவர் **தி.மு. அரசமாணிக்கனார்**
பாராட்டுரை,
'வெற்றி உன் கையில்' : பாவலர் **த. கோவேந்தன்**
நூல் வெளியீடு
சிறப்புரை : சொல்லாய்வறிஞர் **அருளியார்**
நன்றியுரை : புலவர் **அரங்கநாதன்** (உ.த.மு.க)

'தென்மொழி அச்சகம்', சென்னை - 5. தொலைபேசி : 854 7829